KDK SINCE 1909 JAPAN
Buy Online:
shop.eliteradio.com
கொழும்பில் விநியோகம் இலவசம்
(011) 250 0823
facebook.com/kdksrilanka

VIRAKESARI
# வீரகேசரி
THE PREMIER NATIONAL TAMIL DAILY IN SRI LANKA
Registered as a Newspaper at the G.P.O No. QD/133/News/2021 www.virakesari.lk
பிராந்திய,நகரப்பதிப்பு

KDK SINCE 1909 JAPAN
Buy Online:
shop.eliteradio.com
கொழும்பில் விநியோகம் இலவசம்
(011) 250 0823
facebook.com/kdksrilanka

மலர் : 92 இதழ்: 103 கொழும்பு பிலவ வருடம் கார்த்திகை மாதம் 20 ஆம் திகதி திங்கட்கிழமை (06.12.2021) ஹிஜ்ரி 1443 ர.ஆகிர் 30 விலை :ரூ.30 பக்கங்கள் : 20

## பாகிஸ்தான் சம்பவம் உளவுத்துறை உசார்

### நாசகார செயற்பாடுகள் இடம்பெறுவதை தடுக்க பொலிஸ் மா அதிபருக்கு சிறப்பு ஆலோசனை

(எம்.எப்.எம்.பஸீர்)

பாகிஸ்தான் பஞ்சாப் மாநிலத்தின் சியால்கோட் நகரில் பணிபுரிந்து வந்த இலங்கையர் ஒருவர் வன்முறைக்கும்பலால் தாக்கப்பட்டு, எரித்து கொலை செய்யப்பட்ட சம்பவத்தை அடுத்து இலங்கையில் உளவுத் துறையினர் உசார்ப்படுத்தப்பட்டுள்ளனர். 8




ஐக்கிய அரபு இராச்சியத்தின் அபுதாபியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை ஆரம்பமான இந்து சமுத்திர மாநாட்டில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உட்பட தலைவர்கள் பங்கேற்றிருந்தபோது..

கடன் மன்னிப்பு, மறுசீரமைப்பு, கடன் நிவாரணக்காலம் என்ற அடிப்படையில்

## வறிய நாடுகளுக்கு வல்லரசுகள் உதவ வேண்டியது அவசியம்

### இந்து சமுத்திர மாநாட்டில் ஜனாதிபதி கோட்டாபய தெரிவிப்பு



(எம்.மனோசித்ரா)

தொற்று நோயால் பாதிக்கப்பட்டுள்ள வறிய நாடுகளுக்கு கடன் மன்னிப்பு வழங்கல், மறுசீரமைப்பை மேற்கொள்ளல் அல்லது கடன் நிவாரணக் காலங்களை வழங்க வல்லரசு நாடுகளும் பலதரப்பு நிறுவனங்களும் நடவடிக்கை எடுத்தால், அது மிகவும் வரவேற்கத்தக்கதாகும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். 8




பாகிஸ்தானில் இலங்கையர் கொடூரமாக எரித்து கொல்லப்பட்டமைக்கு கண்டனம் தெரிவித்து லாகூரில் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தபோது...

## பங்காளி கட்சிகளுடன் முரண்பட வேண்டாம்

### ஆளும் தரப்புக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அறிவுரை

(இராஜதுரை ஹஷான்)

அரசாங்கத்தின் கூட்டணியில் உள்ள பங்காளிக்கட்சிகளுக்கு இடையிலான முரண்பாடுகளுக்கு தீர்வு கண்டு ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன பெரமுன கூட்டணி என்ற ரீதியில் அரசியலில் ஒன்றிணைந்து செயற்படுவது அவசியமாகும். முரண்பாடுகளை தோற்றுவிக்கும் வகையில் ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் கருத்துரைப்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆளும் கட்சி குழு கூட்டத்தின் போது வலியுறுத்தியுள்ளார். 8



வரவு - செலவு திட்ட வாக்கெடுப்புக்கு முன்னர்

## ஜனாதிபதி, பிரதமரை சந்திக்க தயாராகும் பங்காளி கட்சிகள்

(இராஜதுரை ஹஷான்)

எதிர்வரும் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்புக்கு முன்னர் ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் முக்கிய பேச்சுவார்த்தையில் ஈடுபட ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன பெரமுனவின் பங்காளி கட்சி உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளோம். 8

## புத்தாண்டின் போது அரிசி விலை 250 ரூபாவாக உயரும்

### சீனாவை நாடுவதால் டொலர் நெருக்கடிக்கு தீர்வு கிடைக்காது; ஐக்கிய மக்கள் சக்தி

(எம்.மனோசித்ரா)

மியன்மார் மாத்திரமல்ல, எந்த நாட்டிலிருந்து அரிசியை இறக்குமதி செய்தாலும் எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டு காலத்தின் போது 8

பாகிஸ்தான் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு

## இலங்கையில் இனங்களுக்கிடையில் முரண்பாட்டை தோற்றுவிக்க முயற்சி

### பொலிஸ்மா அதிபர் துரிதமாக அவதானம் செலுத்த வேண்டும்; முஜிபுர் ரஹ்மான்



(எம்.மனோசித்ரா)

பாகிஸ்தானில் இலங்கை பிரஜையொருவர் கொடூரமாக கொலை செய்யப்பட்ட சம்பவம் வன்மையாக கண்டிக்கத்தக்கது. சட்டத்தில் எவ்வித தளர்வுகளும் இன்றி நீதியை நிலைநிறுத்த வேண்டிய பொறுப்பு பாகிஸ்தான் அரசாங்கத்துக்கு காணப்படுகிறது என்பதில் மாற்றுக்கருத்தில்லை. 8

எந்த நாட்டிலிருந்து வந்தாலும்

## அனைவரும் விமான நிலையத்தில் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும்

### இலங்கை மருத்துவ சங்கம் சுகாதார அமைச்சிடம் வலியுறுத்தல்

(எம்.மனோசித்ரா)

தென் ஆபிரிக்காவில் இனங்காணப்பட்ட 'ஒமிக்ரோன்' பிறழ்வு தற்போது இலங்கைக்குள்ளும் நுழைந்துள்ளது. எனவே எந்தவொரு நாட்டிலிருந்தும் வருகை தரும் ஒவ்வொரு நபரும் விமான நிலையத்தில் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு இலங்கை மருத்துவ சங்கம் சுகாதார அமைச்சிடம் வலியுறுத்தியுள்ளது. 8

இனவாத அரசியல் சக்திகள் குறித்து

## அவதானம் தேவை

### சஜித் வலியுறுத்தல்

(எம்.மனோசித்ரா)

பாகிஸ்தான் கொலை சம்பவம் மற்றும் அதன் அடிப்படையிலான கொடூரமான தீவிரவாத சித்தாந்தங்கள் ஒரு போதும் அனுமதிக்கப்படக்கூடாது. 8

பாக்.இல் வசிக்கும் இலங்கையர்கள்

## வீணாக அச்சமடைய தேவையில்லை

### இராணுவ தளபதி சவேந்திர சில்வா

(எம்.எப்.எம்.பஸீர்)

பாகிஸ்தானில் இலங்கையர் ஒருவர் மிகக் கொடூரமாக கொலை செய்யப்பட்ட சம்பவமானது, மத அடிப்படைவாதத்தை அடிப்படையாக கொண்டிராத, ஒரு இடத்தில் நடந்த தனிமையான சம்பவம் என 8

## இன்று நாட்டுக்கு கொண்டுவரப்படுகிறது கொல்லப்பட்ட இலங்கையரின் சடலம்

### 13 பிரதான சந்தேகநபர்கள் உட்பட 235 பேர் கைது; பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் குற்றச்சாட்டு; 900 பேர் தொடர்பில் நீதிமன்றுக்கு அறிக்கை

(எம்.எப்.எம்.பஸீர்)

பாகிஸ்தான், பஞ்சாப் மாநிலம்–சியல் கோட்டில் சித்திரவதைக்குட்படுத்தி எரித்து கொலை செய்யப்பட்ட இலங்கை முகாமையாளர் பிரியந்த குமாரவின் சடலம் இன்று நாட்டுக்கு கொண்டுவரப்படவுள்ளது.

ஸ்ரீலங்கன் விமான சேவைக்குச் சொந்தமான விமானத்தில் இந்த சடலத்தை கொண்டுவர பாகிஸ்தானில் 9

## சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் நாளை முதல் மீள இயங்கும்

### வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில

(இராஜதுரை ஹஷான்)

தற்காலிகமாக மூடப்பட்டுள்ள சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் செயற்பாடுகள் நாளை செவ்வாய்க்கிழமை முதல் மீள ஆரம்பிக்கப்படும். அந்நிய செலாவணி கையிருப்பு வரையறுக்கப்பட்டதன் காரணமாக மூடப்பட்ட சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை 50 நாட்களுக்குள் திறப்பதாக மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றியுள்ளோம் என வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திடம் மிக குறைவான அளவிலேயே அந்நிய செலாவணி கையிருப்பு காணப்படுவதால் 8



# இலங்கை– பாகிஸ்தான் நட்பு, நம்பிக்கை பாதிப்படைய ஒருபோதும் இடமில்லை

## கொலையாளிக்கு அதிகபட்ச தண்டனை - ஜனாதிபதிக்கு உறுதியளித்தார் பாகிஸ்தான் பிரதமர்

(எம்.மனோசித்ரா)

பாகிஸ்தானில் கைத்தொழிற்சாலையில் தொழில் புரிந்துகொண்டிருந்த இலங்கைத் தொழிலாளரான பிரியந்த குமார என்பவர் கொடூரமாகக் கொலை செய்யப்படுவதற்குக் காரணமான அனைத்துக் குற்றவாளிகளுக்கும் எதிராகச் சட்டத்தை நிலைநாட்டுவதாக, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் உறுதியளித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் தொலைபேசி மூலம் தொடர்புகொண்ட பாகிஸ்தான் பிரதமர், இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால நட்புறவு மற்றும் நம்பிக்கை என்பன ஒருபோதும் பாதிப்படைய இடமளிக்கப்படமாட்டாது என்றும் குறிப்பிட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இச்செயலுடன் தொடர்புடைய அனைத்து காணொளிகள் மற்றும் தகவல்கள், தற்போது பாகிஸ்தான் பாதுகாப்புப் பிரிவினரால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் வரை 113 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பதுடன், ஏனையவர்களைத் தேடும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது என்றும், பாகிஸ்தான் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

நீண்டகாலமாகப் பாகிஸ்தானில் தொழில்புரிந்த இலங்கையரான பிரியந்த குமார, ஒரு முகாமையாளராக உயர் தொழில் திறமையைக் காட்டியவர் என்றும் ஜனாதிபதியிடம் பாகிஸ்தான் பிரதமர் தெரிவித்துள்ளார்.

குற்றவாளிகளுக்கு கடவுளின் மன்னிப்பு இல்லை என்றும் சட்டத்திலும் அவர்களுக்கு மன்னிப்பு கிடைக்காதென்றும் தெரிவித்த பிரதமர், நியாயத்தைப் பெற்றுக்கொடுப்பதுடன், குற்றவாளிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்கப்படும் என்றும், இலங்கை அரசாங்கமும் மக்களும் வைத்துள்ள நம்பிக்கையை உறுதி செய்வதாகவும் பாகிஸ்தான் பிரதமர் குறிப்பிட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

# டுபாய் நிதியமைச்சர் ஜனாதிபதி கோட்டாபய விசேட சந்திப்பு

## இலங்கையின் முதலீட்டு வாய்ப்புக்கள் குறித்தும் அவதானம்

(எம்.மனோசித்ரா)

டுபாயின் துணை ஆளுநர், துணைப் பிரதமர், நிதி அமைச்சர் ஷேய்க் மக்தூம் பின் மொஹமட் ரசீத் அல்மக்தூம் மற்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோருக்கிடையில் கடந்த சனிக்கிழமை டுபாய் எக்ஸ்போ 2020 கண்காட்சி வளாகத்தில் விசேட சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. இந்த சந்திப்பில் இலங்கையிலுள்ள முதலீட்டு வாய்ப்புக்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.

இச்சந்திப்பு இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவை பலப்படுத்தும் என்று இரு நாட்டுத் தலைவர்களும் குறிப்பிட்டனர். இச்சந்தர்ப்பத்தில், ஐக்கிய அரபு இராச்சியத்தின் 50ஆவது தேசிய தினக் கொண்டாட்டத்துக்கு ஜனாதிபதி வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

கொவிட் தடுப்பு மற்றும் தடுப்பூசி ஏற்றல் வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் மற்றும் கொவிட் பின்புலத்தில் பொருளாதாரத்தின் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாக ஜனாதிபதி டுபாயின் துணைப் பிரதமருக்கு தெளிவுபடுத்தினார்.

இலங்கையின் கலாசாரம் மற்றும் தனித்துவத்தை உலகுக்கு கொண்டு செல்வதற்கு எக்ஸ்போ கண்காட்சிக்கூடம் சிறந்த சந்தர்ப்பமாகுமென்று குறிப்பிட்ட ஜனாதிபதி, அதற்கு வாய்ப்பளித்தமைக்காக நன்றி தெரிவித்தார். இலங்கையில் இருக்கின்ற முதலீட்டு வாய்ப்புகள் மற்றும் வர்த்தக, கலாசார தொடர்புகள் பற்றி பிரதமரைத் தெளிவுபடுத்துவதற்கு ஜனாதிபதி இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டார்.



'எக்ஸ்போ 2020' கண்காட்சி இந்நாட்டுச் சுற்றுலாக் கைத்தொழில் மற்றும் தேயிலை, ஆடைகள் உள்ளிட்ட பல்வேறு ஏற்றுமதித் துறைகளின் மேம்பாட்டுக்கு சிறந்ததொரு வாய்ப்பாகுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

# தமிழ் முற்போக்கு கூட்டணியை தேசிய அரசியல் இயக்கமாக்க நடவடிக்கை

## ஜனநாயக மக்கள் முன்னணி அரசியல் குழு கூட்டத்தில் ஆராய்வு

கட்சியை சாத்தியமான அனைத்து மாவட்டங்களிலும் பலப்படுத்துவதுடன், ஜனநாயக மக்கள் முன்னணி அங்கம் வகிக்கும் தமிழ் முற்போக்கு கூட்டணியை ஏனைய பங்காளிக் கட்சிகளுடன் இணைந்து பலமான தேசிய அரசியல் இயக்கமாக கட்டியெழுப்பும் நோக்கில் கடுமையாக உழைக்க வேண்டும் என ஜனநாயக மக்கள் முன்னணியின் அரசியல் குழுவில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டதாக கட்சி அறிவித்துள்ளது.

கட்சி தலைவர் மனோ கணேசன் தலைமையில் நேற்று முன்தினம், கொழும்பு பிரைட்டன் விடுதியில் நடைபெற்ற அரசியல் குழு கூட்டத்தின் போது புதிய பதவி நியமனங்கள் வழங்கப்பட்டு, கட்சி மற்றும் கட்சி உள்ளடங்கும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் வளர்ச்சி தொடர்பில் பல தீர்மானங்களும் எடுக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஜனநாயக மக்கள் முன்னணி ஊடகச் செயலகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் கூறியுள்ளதாவது,

கட்சியின் செயலாளர் நாயகமாக பணி செய்து வந்த கட்சியின் முன்னாள் மேல்மாகாண சபை உறுப்பினர் கே.டி. குருசாமி, கட்சியின் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். அதேபோல் உப தலைவராக பணி செய்து வந்த கட்சியின் கொழும்பு மாநகரசபை உறுப்பினர் சி.பாஸ்கரா, சிரேஷ்ட உப தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். அதேபோல் புதிய இரண்டு இணை உப தலைவர்களாக எம். சந்திரகுமார், எஸ்.சசிகுமார் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் கட்சியின் பதவி நிலை வகிபாகங்கள் மீண்டும் அரசியல் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டன. அதன்படி கட்சியின் தலைவர் மனோ கணேசன், பிரதி தலைவர் எம்.வேலுகுமார், பொது செயலாளர் கே.டி.குருசாமி, தேசிய அமைப்பாளர் பிரகாஷ் கணேசன், நிர்வாக செயலாளர் பிரியாணி குணரத்ன, தவிசாளர் ஏ. ஜெயபாலன், நிதி செயலாளர் எஸ்.கணேசன், சிரேஷ்ட உபதலைவர் சி.பாஸ்கரா, இணை உபதலைவர் எம்.சந்திரகுமார், இணை உப தலைவர் எஸ்.சசிகுமார், பிரசார செயலாளர் எம்.பரணிதரன், மகளிர் விவகார செயலாளர் மஞ்சுளா பெருமாள், இளைஞர் விவகார செயலாளர் ஜி.விஷ்ணுகாந்த் ஆகிய பதவிகளுக்கு பெயர் குறிப்பிடப்பட்டோர் இவர்களுடன் சேர்த்து, எம். பாலசுரேஷ் குமார், லோரன்ஸ் பெர்னாண்டோ, ஆர். கமலேஸ்வரன், எசக்கி குமார் ஜெயராமன், எம். பரமசிவம், எஸ்.இருளப்பன், எஸ்.பாலச்சந்திரன், எம்.அன்டனி ஜெயசீலன் ஆகியோரும் கட்சியின் அரசியல் குழு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.



அதேபோல் மாவட்ட அமைப்பாளர்களாக, எம்.பாலசுரேஷ் குமார் (கொழும்பு), எஸ். சசிகுமார் (கம்பஹா), எம்.பரமசிவம்(கண்டி), எம். சந்திரகுமார் (இரத்தினபுரி), எம்.பரணிதரன் (கேகாலை), எம்.அன்டனி ஜெயசீலன் (களுத்துறை) ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். பெயர் குறிப்பிடப்பட்ட மாவட்டங்களில் உடனடியாக உட்கட்சி கட்டமைப்பு பணிகளை துரிதப்படுத்துமாறு அமைப்பாளர்கள் அறிவுறுத்தப்பட்டனர். மாத்தளை, புத்தளம் ஆகிய இரண்டு மாவட்டங்களுக்கு விரைவில் அமைப்பாளர்கள் நியமிக்கப்படுவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

# அடிப்படைவாதத்தை இல்லாதொழிக்க நாட்டு மக்கள் ஒன்றுபட வேண்டும்

## ஞானசார தேரர்

உலகில் உள்ள ஏனைய அடிப்படைவாதங்களைவிட இஸ்லாமிய அடிப்படைவாதம் பயங்கரமானது. அறிவியல்,கலாசாரம்,மனித நேயம் உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் மனித குலம் பெற்றுக்கொண்ட வெற்றியின் பெறுமதியை பலவீனப்படுத்தும் தன்மை இஸ்லாமிய அடிப்படைவாதத்திற்கு உண்டு. எமது நாட்டிலும் புரையோடிப்போயுள்ள இஸ்லாமிய அடிப்படைவாதத்தை இல்லாதொழிக்க நாட்டு மக்கள் ஒன்றுபட வேண்டும் என பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் ஞானசார தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

பாகிஸ்தான் நாட்டில் படுகொலை செய்யப்பட்ட இலங்கையரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்துக் கொள்கிறோம். மத அடிப்படைவாதம் மாத்திரமல்ல ஏனைய அடிப்படைவாத செயற்பாடுகளின் பிரதிபலன் பாரதூரமானதாக காணப்படும். இஸ்லாமிய அடிப்படைவாதம் என்பது உலகிலுள்ள ஏனைய அடிப்படைவாதங்களை காட்டிலும் கொடூரமானது. அறிவியல், தொழில்நுட்பம், மனித நேயம் மற்றும் கலாசாரம் ஆகிய துறைகள் பெற்றுக்கொண்ட வெற்றியின் பெறுமதியை பலவீனப்படுத்தும் தன்மையை இஸ்லாமிய அடிப்படைவாதம் கொண்டுள்ளது.

இஸ்லாமிய அடிப்படைவாதத்தின் செயற்பாடுகள் மனித குலத்திற்கு அப்பாற்பட்டது. ஒருவரை துன்புறுத்தும் போது அதனை ஏனையோர் சுற்றியிருந்து காணொளி ஊடாக காட்சிப்படுத்தி மகிழ்வுறும் குறுகிய மனநிலையினைக் கொண்ட சிந்தனைகள் அவர்கள் வசம் காணப்படுகிறது. அந்தளவிற்கு இஸ்லாமிய அடிப்படைவாதம் அவர்களை ஈர்த்துள்ளது. இஸ்லாமிய அடிப்படைவாதத்தை சாதாரணமாக கருதக்கூடாது.மனித நேயத்திற்கு முன்னுரிமை வழங்கி இப்பிரச்சினையை ஆழமாக நோக்க வேண்டும். இவ்வாறான சம்பவங்கள் எவருக்கும் இனி ஏற்படக்கூடாது என்று பிரார்த்தித்துக் கொள்கிறோம். எமது நாட்டில் காணப்படும் இஸ்லாமிய அடிப்படைவாதம் தலைதூக்காமல் இருப்பதற்கு இச்சம்பவத்தை ஒரு எடுத்துக்காட்டாக கருத வேண்டும். துன்புறுத்தல்களுக்காக்கப்பட்டு கொல்லப்பட்ட இலங்கையரின் நிலை மனதளவில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.எமது நாட்டிலும் புரையோடிப்போயுள்ள இஸ்லாமிய அடிப்படைவாதத்தை இல்லாதொழிக்க நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்றார்.

# புத்தளத்தில் ஐந்து எரிவாயு வெடிப்பு சம்பவங்கள்

(புத்தளம் மேலதிக நிருபர்)

சமையல் எரிவாயு கசிவு காரணமாக கடந்த ஐந்து நாட்களில் புத்தளம் பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்குட்பட்ட மூன்று பொலிஸ் பிரிவுகளில் ஐந்து வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றதாக புத்தளம் பொலிஸ் தடயவியல் பிரிவினர் தெரிவித்தனர். நான்கு வீடுகளிலும், உணவகம் ஒன்றிலும் இவ்வாறு வெடிப்புச் சம்பவம் பதிவாகியுள்ளன.

இதன்படி, புத்தளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புத்தளம் சோல்ட்டன், நிந்தனி, கரம்பை ஆகிய பகுதியிலும், உடப்பு பொலிஸ் பிரிவில் சின்னப்பாடு பகுதியிலும், கற்பிட்டி பொலிஸ் பிரிவில் மணல் தோட்டம் பகுதியிலும் இவ்வாறு எரிவாயு அடுப்பு வெடித்துள்ளன.

சமையல் எரிவாயுவில் ஏற்பட்ட கசிவு காரணமாக கண்ணாடியிலான எரிவாயு அடுப்பு வெடித்துச் சிதறியுள்ளன. மேற்படி வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்ற வீடுகளுக்கும், உணவகத்திற்கும் சென்று ஆய்வுகள் மற்றும் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகவும் புத்தளம் பொலிஸ் தடயவியல் பிரிவினர் மேலும் தெரிவித்தனர்.

# குற்ற விசாரணைப் பிரிவிடம் ஒப்படைக்க அஞ்சுகிறதா அரசு?

## 18 லீற்றர் சிலிண்டர்களுக்கு என்ன நடந்தது - எதிர்க்கட்சி கேள்வி

(எம்.மனோசித்ரா)

சமையல் எரிவாயு சிலிண்டர்களை அண்மித்த வெடிப்பு சம்பவங்களுக்கு எரிவாயு நிறுவனமே பொறுப்பு கூற வேண்டும் என்பதை ஏற்றுக் கொண்டுள்ள அரசாங்கம், இது தொடர்பான விசாரணைகளை இதுவரையில் ஏன் குற்ற விசாரணைப் பிரிவிடம் ஒப்படைக்கவில்லை? இந்த சம்பவத்துடன் தொடர்புடைய அரசியல்வாதிகளுடைய பெயர்கள் வெளிப்படுத்தப்பட்டு விடும் என அரசாங்கம் அஞ்சுகிறதா என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் கேள்வியெழுப்பினார்.

அத்தோடு அண்மையில் விநியோகிக்கப்பட்டு பின்னர் தடை விதிக்கப்பட்ட 18 லீற்றர் சமையல் எரிவாயு சிலிண்டர்களுக்கு என்ன ஆயிற்று என்று கேள்வியெழுப்பியுள்ள முஜிபுர் ரஹ்மான், அவற்றில் மேலும் 3 கிலோ எரிவாயு மீள் நிரப்பப்பட்டு சந்தைகளுக்கு விநியோகிக்கப்படுகிறதா என்றும் கேள்வியெழுப்பினார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இவ்வாறு கேள்வியெழுப்பிய அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நாட்டில் பதிவாகிக் கொண்டிருக்கும் சமையல் எரிவாயு சிலிண்டரை அண்மித்த வெடிப்பு சம்பவங்களுக்காக வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன பதவி விலகியிருக்க வேண்டும். தொடர்ந்தும் இவ்வாறான வெடிப்பு சம்பவங்கள் பதிவாகிக் கொண்டிருக்கின்ற போதிலும், அது தொடர்பான விசாரணைகளை அரசாங்கம் ஏன் குற்ற விசாரணைப் பிரிவிடம் ஒப்படைக்கவில்லை ?

அண்மையில் விநியோகிக்கப்பட்டு பின்னர் தடை விதிக்கப்பட்ட 18 லீற்றர் சிலிண்டர்கள் தற்போது எங்குள்ளன? அவை ஏன் மறைக்கப்பட்டுள்ளன? அந்த சிலிண்டர்களில் மேலும் 3 கிலோ கிராம் வாயு மீள் நிரப்பப்பட்டு 12.5 கிலோ சிலிண்டர்கள் விநியோகிக்கப்படுகின்றனவா? இந்த செயற்பாடுகளின் ஊடாக குற்றத்தை செய்வதற்கு இடமளித்துவிட்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தமை தெளிவாகிறது.

எனவே இவை தொடர்பான விசாரணைகளை குற்ற புலனாய்வு திணைக்களத்திற்கு ஒப்படைத்து சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறு செய்தால் இந்த குற்றத்தை செய்யத் தூண்டிய அரசியல்வாதிகளின் பெயர்கள் வெளிப்படுத்தப்பட்டு விடும் என்ற அச்சத்தின் காரணமாகவா அரசாங்கம் தயங்குகிறது? இவ்வாறான சூழலில் ஜனாதிபதியால் எவ்வாறு சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்த முடியும். கனவில் மாத்திரமே ஜனாதிபதியால் அதனை செய்ய முடியும்.

லிட்ரோ சமையல் எரிவாயு நிறுவனம் நிதி அமைச்சின் கீழ் காணப்படுவதாலா அந்நிறுவனத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படாமலுள்ளது? அவ்வாறெனில் அரசாங்கமே தற்போது குற்றவாளிகளைப் போன்று செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. காரணம் லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாகசபை உறுப்பினர்கள் நிதி அமைச்சினாலேயே நியமிக்கப்படுகின்றனர்.

அதன் காரணமாகவா இந்த அதிகாரிகளும் லிட்ரோ நிறுவனமும் பாதுகாக்கப்படுகிறது? உண்மையில் தற்போது அரசாங்கத்தின் தேவை இவர்களைப் பாதுகாப்பதா? அரசாங்கத்தின் உண்மையான முகம் வெளிப்படுத்தப்படும் என்ற அச்சத்தின் காரணமாகவா சட்டம் நடைமுறைப்படுத்தப்படாமலுள்ளது? இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன வெடிப்பு சம்பவங்களுக்கு சமையல் எரிவாயு நிறுவனங்களே பொறுப்பு கூற வேண்டும் என்று தெரிவித்துள்ள போதிலும், அந்நிறுவனத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படாமல் உள்ளமையே தற்போதுள்ள பிரச்சினையாகும் என்றார்.

## 21 கொவிட் மரணங்கள் பதிவு

(எம்.மனோசித்ரா)

நாட்டில் நேற்று ஞாயிற்றுக்கிழமை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் உறுதிப்படுத்தப்பட்ட 21 மரணங்களுடன் மொத்த கொவிட் மரணங்களின் எண்ணிக்கை 14 461 ஆக உயர்வடைந்துள்ளது. நேற்று உறுதிப்படுத்தப்பட்ட மரணங்களில் 14 ஆண்களும் 7 பெண்களும் உள்ளடங்குகின்றனர். இவர்களில் 18 பேர் 60 வயதுக்கு மேற்பட்டோராவர்.மேலும் நேற்று மாலை வரை 586கொவிட் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர். அதற்கமைய இதுவரையில் கொவிட் தொற்றுறுதி செய்யப்பட்டோர் எண்ணிக்கை 5,67, 522 ஆக உயர்வடைந்துள்ளது. இவ்வாறு இனங்காணப்பட்ட தொற்றாளர்களில் 5,42,326 பேர் குணமடைந்துள்ளனர். 10,735 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# சீனாவை நண்பனாக்கி இந்தியாவை சீண்டி காரியமாற்ற விளைகின்றீர்கள்

## சபையில் எச்சரித்தார் கோவிந்தன் கருணாகரம் எம்.பி. – சீனா பாடம் கற்பித்ததாகவும் தெரிவிப்பு

(ஆர்.யசி, எம்.ஆர்.எம்.வசீம்)

சீனாவை நண்பனாக்கி இந்தியாவைச் சீண்டிக் காரியமாற்ற விளைகின்றீர்கள். ஆபத்தில் காப்பாற்றுவான் என நம்பிய சீனா சேதனப் பசளை விவகாரத்தில் உங்களுக்கு நல்லதொரு பாடத்தைக் கற்றுத்தந்துள்ளது என்று சபையில் சுட்டிக்காட்டிய தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தம் கருணாகரன், சீனாவை நண்பனாக்குவதற்காக இந்தியாவை எதிரியாக்கும் கொள்கையினை மறந்து இந்தியாவும் சீனாவும் எமது நண்பர்கள் என்ற நிலைமைக்கு உங்களது கொள்கையினை மாற்றுங்கள் என்றார்.

பாராளுமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பாதுகாப்பு அமைச்சு, பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு, அரச பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு, உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு, சமூக பொலிஸ் சேவைகள் இராஜாங்க அமைச்சு ஆகியவற்றுக்கான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இதனை கூறினார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

கொவிட் 19 பெருந்தொற்றினை உங்களது தவறான கொள்கைகளால் கட்டுப்படுத்த முடியாது. தமது உயிரினைக் கூட துச்சமென மதித்து கடமையாற்றிக் கொண்டிருக்கும் அலுவலர்களைக் கொண்ட சுகாதாரத்துறைக்கு ஒதுக்கீடு 6.13 வீதம். உற்பத்தித் துறைக்கு முக்கிய பங்களிக்கும் விவசாயத்துறைக்கு 0.97 வீதம். ஒட்டு மொத்த பாதீட்டு ஒதுக்கீட்டை நோக்கும் போது இது மக்கள் நலன் சார்ந்த, நாட்டு நலன் சார்ந்த பாதீடாக நோக்க முடியவில்லை.

சில ஒதுக்கீடுகளின் அதிகரிப்பினை நோக்கும் பொழுது அது பேசன்ரேஜ் பெறுவதற்கான ஒதுக்கீடாகவே நோக்க முடிகிறது. ஒரு வகையில் இது மக்கள் நலன் சார்ந்த பாதீடு என்பதை விட, நாட்டின் பொருளாதார நலன் சார்ந்த பாதீடு என்பதை விட, ஆட்சியாளர்களுக்கான பாதீடு என்பதே பொருத்தம் என்பது எனது கருத்தாகும். பாதுகாப்புத் தொடர்பாக நான் கூற விரும்புவது இந்து சமுத்திரத்தில் நமது நாட்டின் கேந்திர மையம், பிராந்திய ஒத்துழைப்பு, பிராந்திய அபிவிருத்தி மற்றும் பிராந்தியப் பாதுகாப்பு என்பன தொடர்பாக நம் நாட்டுக்குத் தேவையான தெளிவான கொள்கை ஒன்று இன்னும் இல்லை. அதை உருவாக்கவும் நீங்கள் முனையவில்லை. தவறான வெளிநாட்டுக் கொள்கைகளை மேற்கொண்டு நமதுநாட்டிற்கே பெருமையுடன் இருந்த அணிசேராக்கொள்கையினைஅழித்துவிட்டுதென்னாசியப்பிராந்திய வல்லரசான இந்தியாவுக்கு சவால் விடும் அளவுக்கு கொள்கைகளை வகுப்பதிலேயே நீங்கள் கவனம் செலுத்துகின்றீர்கள். உங்களது அமைச்சரவையின் சில அமைச்சர்களது அறிவீனமான உரைகள் புத்திஜீவித்துவமற்ற உரைகள் இவற்றையே தெளிவாகக் காட்டுகின்றது.

அண்டை நாடான இந்தியாவுடனான வரலாற்று, கலாசார, பாரம்பரிய, மதத் துறைகளில் இருநாடுகளுக்குமிடையே பிரிக்கமுடியாதபிணக்குகள்ஏற்படமுடியாதஇணைப்புவரலாற்றுக்காலம்முதல்உள்ளது என்பதைநீங்கள்இலகுவாகமறந்துவிடுகிறீர்கள். சீனாவைநண்பனாக்கிஇந்தியாவைச்சீண்டிக்காரியமாற்ற விளைகின்றீர்கள். ஆபத்தில் காப்பாற்றுவான் என நம்பிய சீனா சேதனப் பசளை விவகாரத்தில் உங்களுக்கு நல்லதொரு பாடத்தைக் கற்றுத் தந்துள்ளது. அதிலிருந்தாவது உங்கள் வெளிநாட்டுக் கொள்கை, தேசிய பாதுகாப்புக் கொள்கைகளின் மீதான தவறுகளைத் திருத்த விளையுங்கள். சீனாவை நண்பனாக்குவதற்காக இந்தியாவை எதிரியாக்கும் கொள்கையினை மறந்து இந்தியாவும் சீனாவும் எமது நண்பர்கள் என்ற நிலைமைக்கு உங்களது கொள்கையினை மாற்றுங்கள்.

# சுபயோகம்

**06. 12.2021 ஸ்ரீ பிலவ வருடம் கார்த்திகை மாதம்20ஆம் நாள் திங்கள்கிழமை**

சுக்கில பட்ச துவிதியை திதி காலை 9.04 வரை அதன் மேல் திரதியை திதி மூலம் நட்சத்திரம் காலை 8.16 வரை அதன் மேல் பூராடம் நட்சத்திரம் சிரார்த்த திதி வளர்பிறை திரிதியை சித்தயோகம் முழுவதும் கீழ்நோக்கு நாள் சந்திராஷ்டம நட்சத்திரங்கள் ரோகினி, மிருகசீரிடம். சுபநேரங்கள் 9.00–10.30 எமகண்டம் 10.30–12.00 குளிகை காலம் 12.00–1.30 வாரசூலம் கிழக்கு பரிகாரம் –தயிர்

| | | | |
|---|---|---|---|
| | | ராகு | |
| குரு | தினசரி கிரகநிலை கார்த்திகை 20 திங்கள் | | |
| சுக் சனி | | | |
| சந் புத | சூரி கேது | செவ் | |

மேடம் –சுகம், நோய்நீங்குதல்
இடபம் –காரியசித்தி, அனுகூலம்
மிதுனம் – பகை, அபவாதம்
கடகம் –கீர்த்தி, செல்வாக்கு
சிம்மம் –தனம், பணவரவு
கன்னி –ரோகம், வேதனை
துலாம் –மகிழ்ச்சி, மனநிறைவு
விருச்சிகம் –சோர்வு, அசதி
தனுசு –விவேகம், வெற்றி
மகரம் –பாசம், இரக்கம்
கும்பம் –கடின உழைப்பு, உயர்வு,
மீனம் –அன்பு, பாசம்

இன்று மூலம் நட்சத்திரம் ஆஞ்சநேயர் அவதார திருநட்சத்திரம் அரியணை அனுமான் தாங்க என்கிறார். கம்பநாட்டாழ்வார் ஸ்ரீராமர் பட்டாபிஷேகத்தின் போது சிம்மாசனத்தை ஆஞ்சநேயர் தாங்குகின்றான். அத்தகைய ஸ்ரீ ஆஞ்சநேயனை வழிபடுவதால் நம் துன்பங்கள் தவிடுபொடியாகும்.

சுக்கிரன், புதன் கிரகங்களின் ஆதிக்க நாளின்று
அதிர்ஷ்ட எண்: 9
பொருந்தா எண்: 3,6,8
அதிர்ஷ்ட வர்ணங்கள்: பச்சை, மஞ்சள்

இராமரத்தினம் ஜோதி
(தெஹிவளை ஸ்ரீ விஷ்ணு கோயில்)


vistara
Fly the new feeling
எங்களின் பிஸ்னஸ் கிளாஸினூடாக
இந்தியாவின் சிறப்புக்களை அனுபவியுங்கள்.
நேரடியாக கொழும்பிலிருந்து டெல்லிக்கு பயணியுங்கள்
திரும்பல் கட்டணத்துடன் LKR 118949 இலிருந்து சகலமும் உட்பட*.
சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் மற்றும் டாடா இணைந்துருவாக்கும்
இந்தியாவின் மிகச் சிறந்த விமானசேவை விஸ்தாராவுக்கு
உங்களை அன்புடன் வரவேற்கின்றோம்.
INDIA
• சொகுசு மிக்க இடவசதியுடன் வடிவமைந்த கெபின்கள்.
• செக்-இன், போர்டிங் மற்றும் பெக்கேஜ்கள் முன்னுரிமையில் கையாளப்படும்.
• 45kg வரையான செக்-இன் பெக்கேஜ் அலவன்ஸ்.
• அற்புதமான உணவுகள் மற்றும் பிரிமியம் பெவரேஜ்கள்.
• கோவிட்-19 பாதுகாப்பு நெறிமுறைகளை பின்பற்றும் கேபின் க்ரூவின் கனிவான உபசரிப்புகளை அனுபவியுங்கள்.
WORLD CLASS
SANITISATION STANDARDS
WORLD AIRLINE
SKYTRAX
AWARDS 2021
Best Airline India & Southern Asia
*விமான கட்டணத்தில் வரிகள் மற்றும் கட்டணங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.
இவை பிரதிநிதித்துவ நோக்கத்துக்கான படங்களே. பூரண விபரங்களுக்கு airvistara.com/lk/en/adtnc
airvistara.com

## இன்றைய சிந்தனை

**தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்**
**தீவினை யென்னுஞ் செருக்கு**
(திருக்குறள்)

**தீயவை செய்தலாகிய செருக்கைத் தீவினை உடைய பாவிகள் அஞ்சார், தீவினை இல்லாத மேலோர் மட்டுமே அஞ்சுவர்.**

VIRAKESARI
வீரகேசரி
2021 டிசம்பர் 6ஆம் திகதி திங்கட்கிழமை
எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் (சிலோன்) (பிரைவேட்) லிமிடெட்,
267, ரஜ மாவத்தை, ஏக்கல, ஜா–எல. Tel. : 011 7322750, 011 7322751,
011 7322754, 011 7322755, 0117322736
Fax : 011 7322752 Web Site : www.virakesari.lk
E-mail : editordaily@virakesari.lk, kesari25@virakesari.lk
News On-line : onlinenews@virakesari.lk Advertisment : advertising@virakesari.lk
Circulation : circulation@virakesari.lk

# பயங்கரவாத தடைச் சட்டம் தீர்மானம் எடுப்பது முக்கியம்

பயங்கரவாத தடைச்சட்டத்தில் மேற்கொள்வதற்கு எதிர்பார்த்திருப்பதாக அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டுள்ள பெரும்பாலான திருத்தங்கள் ஏற்கனவே அச்சட்டத்தில் உள்வாங்கப்பட்டிருக்கும் அதேவேளை, மிகமோசமான மனித உரிமை மீறல்களுக்கு வழிவகுக்கக்கூடிய சரத்துக்கள் குறித்து எவ்வித அவதானமும் செலுத்தப்படவில்லை என்றும் எனவே பயங்கரவாதத்தடைச்சட்டத்தை முழுமையாக நீக்குவதுடன் அதன் பிரயோகத்தை இடைநிறுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று 13 சிவில் சமூக அமைப்புக்களும் 47 மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களும் இணைந்து கூட்டாக வலியுறுத்தியுள்ளனர்.

ஏற்கனவே அடக்குமுறைகளுக்கு உள்ளாக்கப்பட்டு ஒடுக்கப்பட்ட சமூகத்தின் மத்தியில் மேலும் அச்சத்தை விதைப்பதன் ஊடாக தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாது. முரண்பாடுகள் மற்றும் வன்முறைகளுக்கான அடிப்படைக் காரணத்தைக் கண்டறிந்து, அதனைக் களைவதற்கு நடவடிக்கை எடுப்பதன் ஊடாகவே அரசாங்கம் எதிர்பார்ப்பது போன்று தனிப்பட்ட சுதந்திரத்திற்கும் தேசிய பாதுகாப்பிற்கும் இடையில் சமநிலையை அடைந்துகொள்ள முடியும் என்றும் மனித உரிமை அமைப்புக்கள் குறிப்பிட்டுள்ளன.

பல தசாப்தகாலமாக பயங்கரவாதத் தடைச்சட்டமானது தமிழ்ச் சமூகத்திற்கு எதிரான ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டு வந்திருப்பதுடன் உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல்களின் பின்னர் அச்சட்டம் முஸ்லிம் சமூகத்துக்கு எதிராகவும் பயன்படுத்தப்படுகின்றது. அதுமாத்திரமன்றி இச்சட்டமானது ஜே.வி.பி. கலவரம் இடம்பெற்ற காலப்பகுதியில் சிங்கள சமூகத்துக்கு எதிராகவும் பிரயோகிக்கப்பட்டது. ஆகவே பயங்கரவாதத் தடைச்சட்டத்துடன் தொடர்புடைய எந்தவொரு விடயத்தை கையாளும்போதும் கடந்த காலங்களில் அச்சட்டத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதி மற்றும் இழப்பீடு என்பன வழங்கப்படுவதை உறுதி செய்தல் குறித்தும் அவதானம் செலுத்தப்படவேண்டும் என்றும் அந்த அமைப்புக்கள் வலியுறுத்தியுள்ளன.

நாட்டில் கடந்த 40 வருடங்களுக்கும் மேலாக காணப்படுகின்ற பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மாற்றியமைக்க வேண்டும். அதில் திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டும். அல்லது அதனை நீக்கிவிட்டு சர்வதேச தரத்துக்கு உட்பட்ட புதியதோர் சட்டத்தை கொண்டு வரவேண்டும் என்ற விடயம் தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டு வருகின்றது. எனினும் அதனை மேற்கொள்வதில் அதிகார தரப்பில் தயக்கம் கட்டப்பட்டு வருகிறது. எப்படியிருப்பினும் அது தொடர்பாக நீண்ட கால வலியுறுத்தல்கள், நீண்ட கால அழுத்தம் பிரயோகிப்புக்கு அமைவாக அண்மைக்காலமாக அதனை திருத்தி அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. எனினும் அந்தத் திருத்தங்கள்கூட ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இல்லை என்பதே மனித உரிமை செயற்பாட்டாளர்களின் சிவில் மனித உரிமை அமைப்புகளின் சர்வதேச நிறுவனங்களின் நிலைப்பாடாக அமைந்திருக்கின்றது.

முக்கியமாக 2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் இந்த பயங்கரவாத தடைசட்டத்தை நீக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுவாக முன்வைக்கப்பட்டு வந்தது. சர்வதேச நாடுகள், சர்வதேச மனித உரிமை அமைப்புகள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை என்பன தொடர்ச்சியாக அரசாங்கம் இந்த பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கவேண்டும். அல்லது திருத்தங்களை கொண்டு வர வேண்டும். மற்றும் புதிய சர்வதேச தரத்துக்கு உட்பட்ட வகையில் புதிய சட்டத்தை கொண்டு வரவேண்டும் என்ற விடயங்களை தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றன. அதனடிப்படையிலேயே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக் ஷ தலைமையிலான அரசாங்கம் இந்த பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்பாக ஆராய்வதற்கு ஒரு குழுவை நியமித்திருந்தது. அதுமட்டுமன்றி வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் சிவில் சமூக தரப்பினருடன் இது தொடர்பாக தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார். இந்தநிலையில் அண்மையில் சிவில் சமூக பிரதிநிதிகளுடன் வெளிவிவகார அமைச்சின் மேற்பார்வை ஆலோசனை குழுவில் கருத்து வெளியிட்டிருந்த அமைச்சர் ஜி. எல். பீரிஸ் இதனை முழுமையாக நீக்கி விட முடியாது என்றும் அதில் திருத்தங்களை கொண்டு வரலாம் என்றும் தெரிவித்திருந்தார். இந்த நிலையிலேயே தற்போது மனித உரிமை அமைப்புக்கள் இதுதொடர்பாக கரிசனை வெளியிட்டுள்ளன.

அதாவது ஏற்கனவே அடக்குமுறைகளுக்கு உள்ளாக்கப்பட்டு ஒடுக்கப்பட்ட சமூகத்தின் மத்தியில் மேலும் அச்சத்தை விதைப்பதன் ஊடாக தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாது. முரண்பாடுகள் மற்றும் வன்முறைகளுக்கான அடிப்படைக்காரணத்தைக் கண்டறிந்து, அதனைக் களைவதற்கு நடவடிக்கை எடுப்பதன் ஊடாகவே அரசாங்கம் எதிர்பார்ப்பது போன்று தனிப்பட்ட சுதந்திரத்திற்கும் தேசிய பாதுகாப்பிற்கும் இடையில் சமநிலையை அடைந்துகொள்ளமுடியும் என்றும் மனித உரிமை அமைப்புக்கள் தொடர்ச்சியாக வலியுறுத்திவருகின்றன.

தேசிய பாதுகாப்பை வலுப்படுத்துதல் என்ற போர்வையில் மக்களின் சுதந்திரத்தை மட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமாயின், அவை நாட்டின் ஜனநாயகத்தையும் சட்டத்தின் ஆட்சியையும் சீர்குலைப்பதுடன் அனைத்து சமூகங்களும் பாதுகாப்பின்மையை உணர்வதற்கும் வழிவகுக்கும் என்றும் சிவில் மற்றும் மனித உரிமை அமைப்புக்கள் கூறுகின்றன.

அந்தவகையில் அரசாங்கம் விரைவாக இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும். பயங்கரவாத தடைச் சட்டத்தை மாற்றி அமைக்க வேண்டும் அல்லது அதனை நீக்க வேண்டும். சர்வதேச தரத்திற்கு அமைவாக புதியதொரு சட்டத்தை கொண்டு வரலாம். அல்லது அதனை முழுமையாக திருத்தி அமைக்க வேண்டும். இதில் ஏதாவது ஒன்றை அரசாங்கம் செய்தாக வேண்டும். காரணம் தொடர்ச்சியாக இந்த விடயம் சர்வதேச மட்டத்தில் வலியுறுத்தப்பட்டு வருகின்றது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இதுவரை இலங்கை தொடர்பாக 8 பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டு இருக்கின்றன. அதில் 7 பிரேரணைகளில் பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்பாக தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. அதுமட்டுமின்றி ஐக்கிய நாடுகள் சபை, அமெரிக்கா, பிரிட்டன் போன்ற தரப்புகளில் இருந்தும் வெளியிடப்படுகின்ற அறிக்கைகளில் பயங்கரவாதச் சட்டம் நீக்கப்பட வேண்டும் அல்லது சர்வதேச தரத்துக்கு உட்பட்டு திருத்தப்பட வேண்டும் போன்ற விடயங்கள் தொடர்ச்சியாக வெளியிடப்பட்டு வருகின்றன. மேலும் சர்வதேச மன்னிப்புச் சபை, சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் போன்ற சர்வதேச மனித உரிமை அமைப்புகளும் கூட தொடர்ச்சியாக இலங்கை பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கிவிட வேண்டும் என்றும் அதில் திருத்தங்களைக் கொண்டுவர வேண்டும் என்றும் சர்வதேச சட்டத்திற்கு அமைவாக புதிய சட்டத்தை கொண்டு வரலாம் என்றும் தெரிவித்து வருகின்றன.

இந்தநிலையில் இது தொடர்பாக அரசாங்கம் அவசரமாக ஆராய்ந்து தீர்மானம் எடுப்பது முக்கியமாக அமைகின்றது. கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு பதிலாக புதிய சட்டம் ஒன்றை கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதற்கான வரைபு உருவாக்கப்பட்டது. எனினும் அதனை சர்தேசஅமைப்புக்கள் எதிர்த்தன. அதேபோல தற்போது ஆட்சியில் இருக்கின்ற தரப்பினரும் அந்த நேரத்தில் எதிரணியில் இருந்து கொண்டு அந்த புதிய வரைபை எதிர்த்தனர். அதில் மனித உரிமை மீறல் விடயங்கள் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டது. அந்தவகையிலேயே தற்போது இந்த பயங்கரவாத தடைச் சட்டத்தை மாற்றி அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டு வருகின்றது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக் ஷவும் பல சந்தர்ப்பங்களில் இந்த பயங்கரவாத தடைச் சட்டம் திருத்தப்படும் என்று தெரிவித்திருந்தார். அரசாங்கமும் அதில் உறுதியாக இருப்பதாக சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தொடர்ச்சியாக தெரிவித்து வந்திருக்கிறார். அதேபோன்று நீதி அமைச்சரும் பயங்கரவாத தடைச்சட்டம் மாற்றி அமைக்கப்படும் என்ற கருத்தை வெளியிட்டு வருகின்றார். அரசாங்கம் விரைவாக இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நாட்டில் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை வேண்டும். அதில் அரசாங்கம் பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்து நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியமானதாக இருக்கின்றது. அதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. ஆனால் அவ்வாறு கொண்டு வரப்படும் விடயங்கள் அப்பாவி மக்களை பாதிப்பதாக அமைந்துவிடக்கூடாது. அவை தொழில்சார் ரீதியில் முன்னெடுக்கப்பட வேண்டும். மேலும் இதுபோன்ற சட்டங்களால் அரசியல் ரீதியில் எந்த ஒரு தரப்பையும் முடக்குவதற்கு முயற்சிக்கக்கூடாது.

பயங்கரவாத தடைச் சட்டம் என்பது சர்வதேச ரீதியிலும் அரசாங்கத்திற்கு ஒரு அசௌகரியத்தை ஏற்படுத்தும் ஒரு விடயமாக காணப்படுகின்றது. கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். எனவே விரைவாக அரசாங்கம் இந்த சர்வதேச அமைப்புகள், சர்வதேச நாடுகள் கூறுகின்ற விடயங்கள் குறித்து கரிசனை செலுத்தவேண்டும். உள்நாட்டில் சிவில் சமூக பிரதிநிதிகள், மனிதஉரிமை அமைப்புகள் மற்றும் பாதிக்கப்பட்ட தரப்பினர் கூறுகின்ற விடயங்கள் குறித்தும் கவனம் செலுத்துவதுடன் இந்த பயங்கரவாத தடைச்சட்டத்தை மாற்றி அமைப்பதற்கும் சர்வதேச தரத்துக்கு உட்பட்ட வகையில் இதனை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

# குமாரதாஸ் மாப்பாண முதலியாரும் நல்லூரின் சமத்துவவாத பாரம்பரியமும்



*நாதஸ்வரத்தின் மிகவும் இதமான ஒலி காற்றில் கலந்திருக்கின்றது. மனதின் ஏகத்தைப் பிரதிபலிக்கின்ற அதன் எதிரொலி நியூயோர்க் நகரத்தின் இருண்ட பகுதிகளில் வியாபிக்கின்றது. இலங்கை மற்றும் இந்தியாவிலிருந்து அநேக இசைக்கலைஞர்கள் நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு வருகை தந்து ஒருவருடன் ஒருவர் போட்டியிட்டுக் கொண்டு தமது கலைத்திறமையை வெளிக்காட்டுகின்ற நாள் அது. மாலையில் பச்சைநிற ஆடையில் அலங்கரிக்கப்பட்டிருக்கின்ற முருகப்பெருமானை அவரது தோள்களில் தவழும் பூக்களுடன் காவிச்செல்வார்கள். சிறுவயதில் நான் பார்த்த இந்தக்காட்சிகள் இசையையும் நடனத்தையும் ஒருங்கே ஆழமாக வேரூன்றச் செய்தன.*

*எனது பாட்டியும் அவரது தாயாரும் வாழ்ந்த இடமே சிறுபராயத்தில் எனது சகோதரர்களின் வீடாக இருந்தது. எனவே ஒவ்வொரு பாடசாலை விடுமுறையையும் நல்லூரில் அவர்களுடன் கழிப்பது வழக்கமாக இருந்தது. நன்கு வசதிவாய்ப்புள்ளவர்களுக்கு யாழ்ப்பாணம் என்பது பெரும்பாலும் தாய்வழி இடமாகவே காணப்பட்டது. வரதட்சணையாக வழங்கப்படுகின்ற பெருமளவான சொத்துக்கள், தமது கணவர்களுக்கும் மேலான அதிகாரத்தையும் வளமான வாழ்வையும் பெண்களுக்கு நல்கின. ஒருகாலத்தில் கிராமசேவகராகவும் புதுடில்லியில் உயர்ஸ்தானிகராகவும் இருந்த எனது பாட்டனாரின் அனைத்துப் பணிகளும் வீட்டின் முகப்பு அறையில் (வராண்டா) இடம் பெறும் அதேவேளை, அருகிலுள்ள அறையில் எனது பாட்டியும் அவரது தாயாரும் அமர்ந்து மக்களுடன் தொடர்புடைய விவகாரங்களைப் பார்த்துக்கொள்வார்கள். யார் யாரைத் திருமணம்செய்துகொள்வது? வரதட்சணையாக எவ்வளவு சொத்துக்களைப் பெறுவது? புதிதாக மேற்கொள்ளப்பட்ட காணி கொள்வனவுகள் என்ன? சமூகத்திலுள்ள பிளவுகளை களைவது எப்படி? பாரம்பரியங்களை எவ்வாறு பாதுகாப்பது? கோவில் நிர்வாகத்தைப் பொறுத்த மட்டில் தினமும் எவற்றைச்செய்யவேண்டும்? உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் அவர்களாலேயே தீர்க்கப்படும்.*

*நல்லூர் கந்தசுவாமி கோவில் அமைந்திருந்த வீதியின் கீழ்ப்பகுதி குறிப்பாக எனது பாட்டி உள்ளிட்ட எனது குடும்பத்திலுள்ள பெண்களால் முன்னரேயே ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது. அக்கோவில் எவ்வாறு புனரமைக்கப்பட்டது. அதனை எப்படி மேலும் மெருகூட்டுவது என்ற கதைகளை எனது இளம்பராயத்தில் கேட்டு வளர்ந்திருக்கிறேன்.*

*எனது பாட்டியும் அவரது தாயாரும் மேலும் பல நல்லூர்வாசிகளுடன் இணைந்து கோவிலை மீட்டெடுக்கப்போகின்ற இளம் வாலிபனாக குமாரதாஸ் மாப்பாண முதலியாரைக் கருதினார்கள். குமாரதாஸ் என்று பேரன்புடன் அழைக்கப்பட்ட அவர், நல்லூர் பரம்பரையின் இரண்டாவது வாரிசு ஆவார். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலும் கொழும்பு புனித பீட்டர்ஸ் கல்லூரியிலும் கல்விபயின்ற அவர், மருத்துவத்துறையிலே உயர் கல்வியைப் பெறவிரும்பினார். இருப்பினும் நல்லூர்வாழ் பெண்கள் ஆலய நிர்வாகத்தைப் பொறுப்பேற்றுக்கொள்ளுமாறு அவரிடம் கேட்டுக்கொண்டனர். 1964 ஆம் ஆண்டில் அவரது சகோதரர் உயிரிழந்த பின்னர், நல்லூர் ஆலய நிர்வாகத்தை முழுமையாகப் பொறுப்பேற்றுக்கொண்ட குமாரதாஸ், கடந்த அக்டோபர் மாதம் 9 ஆம் திகதி தனது உயிர்பிரியும் வரையில் ஆலய நிர்வாகத்தை முறையாக வழிநடத்தினார்.*

*முதலில் ஆலய நிர்வாகத்தைக் கொண்டு நடத்துவதற்காக அறிவியல் ரீதியில் துல்லியமானதும் தெளிவானதுமான திட்டமொன்றை குமாரதாஸ் அறிமுகப்படுத்தினார். இரவுநேரத்திலும் உரிய வேளைகளில் பூஜைகளும் சடங்குகளும் நடைபெற்றன. குமாரதாஸ் அனைத்து விடயங்களிலும் நேர்த்தியான தன்மையையும் துல்லியத்தையும் விரும்புபவராக விளங்கினார். அவர் ஆலய பூசகர்கள் மற்றும் இசைக்கலைஞர்கள் மிகுந்த பக்தியுடன் இருப்பதை உறுதிப்படுத்தினார். வெகுவிரைவிலேயே நல்லூரும், யாழ்ப்பாணமும் ஒட்டுமொத்த இலங்கையும் அதற்கான பிரதிபலிப்பைக் காண்பிக்கத்தொடங்கியது. நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு வருகைதரும் பக்தர்களின் எண்ணிக்கை உயர்வடைந்ததுடன் 1980 ஆம் ஆண்டளவிலே வடமாகாணத்தின் முன்னணி ஆலயமாக மாறியது. பக்தர்களின் எண்ணிக்கை அதிகரித்தையடுத்து, குமாரதாஸ் ஆலயத்தில் கட்டமைப்பு ரீதியான புத்தாக்கங்களை ஏற்படுத்துவதில் கவனம் செலுத்தினார். அதன்படி ஆலயவாசல் விரிவாக்கப்பட்டதுடன் மேலும் பல குறிப்பிடத்தக்களவிலான மாற்றங்கள் செய்யப்பட்டன. என்னுடைய நண்பர் ஒருவர் நல்லூர் கந்தசுவாமி கோவிலை 'வடக்கின் வத்திக்கான்' என்று குறிப்பிடுவார்.*

*அங்கு மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் அனைவரையும் மகிழ்ச்சிக்குள்ளாக்கவில்லை. இருப்பினும் குமாரதாஸின் செயற்திறன்மிக்க சிறப்பான நிர்வாகத்தினால் உலகம் முழுவதிலும் இருந்து பெருமளவான பக்தர்கள் நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு வருகைதந்தார்கள். போருக்கு மத்தியிலும் ஆலயத்தின் மீதிருந்த நம்பிக்கை சீர்குலையவில்லை. நல்லூர் முருகப்பெருமானுக்கும் கதிர்காமக் கந்தனுக்கும் இடையில் ஒற்றுமைகள் இருப்பதை உணர்ந்த பாதுகாப்புத்தரப்பு பிரதிநிதிகளும் ஆலயத்திற்கு வருகைதந்து வழிபட்டார்கள்.*

*ஆலயத்தின் இந்த மாறுதல்களில் குமாரதாஸின் மனைவி சுகிர்தா நமசிவாயம் மிக முக்கியமான பங்களிப்பை வழங்கியவராவார். அவரது தலைமுறையில் மிகவும் அழகான, திறமையான பெண்ணான சுகிர்தா, ஆலய விழாக்களின்போது பயன்படுத்தக்கூடிய துணிவகைகள் மற்றும் அலங்காரப்பொருட்களைத் திட்டமிடுவதில் தனது பங்களிப்பை வழங்கினார். பூசகர்கள் இலங்கையிலும் இந்தியாவிலும் உள்ள ஏனைய ஆலயங்களுக்குச் சென்று பயிற்சி பெற்றுக்கொண்டார்கள்.*

*நல்லூர் ஆலயமென்பது குமாரதாஸின் வாழ்நாள் வேட்கையாகும். அவர் தனது 90 வயதிலும், குறிப்பாக அவர் மரணிப்பதற்கு சில தினங்களுக்கு முன்னரும்கூட வெள்ளை வேட்டியும் சால்வையும் அணிந்து ஆலயத்திற்கு வருகைதந்து, அங்கு அமர்ந்திருந்தார். மிகவும் ஒழுக்கமான அந்த மனிதரின் எளிமை நம்மனைவருக்குமான மிகச்சிறந்த முன்னுதாரணமாகும்.*

*சில குழுக்களும் அமைப்புக்களும் இணைந்து 'அனைவரையும் உள்வாங்காத' ஓர் இடமாக நல்லூரை மாற்றியமைப்பதற்கு முயற்சிப்பதாக அண்மையில் பத்திரிகைகளில் வெளியாகியிருந்த சில கட்டுரைகளில் குறிப்பிடப்பட்டிருந்தது. இது மிகுந்த கவலையளிக்கின்றது. மாறுபட்ட வரலாற்றைக் கொண்ட நல்லூர் கோவில், 'சமத்துவமான கலாசாரத்தை' பின்பற்றிய கோவில் என்ற அடிப்படையிலும் அதன் பெயரை நிலைநாட்டியுள்ளது.*

*எனது தந்தை ஐக்கிய நாடுகள் சபையில் பணியாற்றும் பொறுப்பை ஏற்றுக்கொண்டதையடுத்து, நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சர்வதேச பாடசாலையில் நான் ஐந்தாம் தரத்தில் கல்விகற்றுக்கொண்டிருந்தேன். அங்கு நாம் உலகளாவிய ரீதியிலுள்ள மதங்கள் தொடர்பில் கற்றதுடன் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த இளம் ஆசிரியரொருவர் எமக்கு இந்துமதம் பற்றிக் கற்பித்தார். 'இந்துமதம் அதன் சாதியக்கட்டமைப்பினால் பெயர் பெற்றிருக்கின்றது. அதுவே ஏனைய மதங்களிலிருந்து இந்துமதத்தை வேறுபடுத்துகின்றது' என்று கூறிய அவர், சாதியக்கட்டமைப்பு தொடர்பில் விபரித்தார். அவருக்கெதிராகக் கிளர்ந்தெழுந்த கோபத்தினால் உண்டான அழுகையுடன் அவர் பொய்யான விடயங்களைக் கற்பிக்கின்றார் என்று அவரிடமே கூறினேன். அதனையடுத்து நான் அதிபர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டேன். அவர்கள் எனது தந்தையை வருகைதந்து, என்னை வீட்டிற்கு அழைத்துச்செல்லுமாறு கூறினார்கள். அவருடன் வீட்டிற்குச் செல்லும்போது, ஆசிரியர் கூறியதைப்போன்ற சாதியக்கட்டமைப்பு இன்னமும் நடைமுறையில் இருப்பதாகக்கூறி அவர் என்னை அதிர்ச்சிக்குள்ளாக்கினார். அதுமாத்திரமன்றி இந்திய தேசியவாத இயக்கத்தினால் ஈர்க்கப்பட்ட அவரது தலைமுறையினர் இந்த வெட்கக்கேடான வரலாற்றிக்கு எதிராகப்போராடும் உத்வேகத்தைக் கொண்டிருந்ததாகவும் தெரிவித்தார். காந்தியின் சீடரான எனது பெரிய மாமா எஸ்.சோமசுந்தரமும் குமாரதாஸின் தந்தையும் யாழ்ப்பாணத்திலுள்ள ஏனைய முற்போக்குக் குழுக்களுடன் இணைந்து தலித்துக்களை அழைத்துக்கொண்டு நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்குள் நுழைந்தது பற்றியும் எனது தந்தை குறிப்பிட்டார். இவற்றை எனது கொள்ளுப்பாட்டியின் அனுமதியின்றி நிச்சயமாகச் செய்திருக்கமுடியாது. செல்வி திருச்சந்திரன் சாதியக்கட்டமைப்பு தொடர்பில் அண்மையில் எழுதியுள்ள புத்தகத்தில், அனைத்து பக்தர்களுக்கும் அதன் கதவுகளைத் திறந்த கோவில்களில் நல்லூர் முதன்மையானது என்பதை உறுதிப்படுத்தியிருக்கின்றார்.*

*இந்த சமத்துவவாத கலாசாரத்தை குமாரதாஸ் நன்கு புரிந்துகொண்டார். அதன்படி கோவிலுக்குள் நுழையும் ஆண்கள் மேலங்கியை அணியக்கூடாது என்ற நடைமுறையைக் கடைப்பிடித்தார். மரியாதையின் நிமித்தம், சாதி மற்றும் வர்க்க வேறுபாடுகளின் அடையாளங்களை நீக்கி கடவுளுக்கு முன்னால் அனைவரும் சமமாக இருப்பதை உறுதிசெய்வதே அதன் நோக்கமாகக் காணப்பட்டது.*



ராதிகா குமாரசுவாமி

*நல்லூர் கந்தசுவாமி கோவில் நிர்வாகத்தை குமாரதாஸ் பொறுப்பேற்றுக்கொண்டதிலிருந்து தற்போதுவரை அர்ச்சனைக்கான கொடுப்பனவு ஒரு ரூபாவாகவே பேணப்பட்டுவருகின்றது. ஏழைகள் உள்ளடங்கலாக அனைவரும் அர்ச்சனைக்கான வாய்ப்பைப் பெறவேண்டும் என்பதில் அவர் உறுதியாக இருந்தார். போர் இடம்பெற்ற காலப்பகுதியில் இடப்பெயர்வுகளால் பாதிக்கப்பட்டவர்கள் தங்குவதற்காக நல்லூரின் கதவுகள் திறக்கப்பட்டதுடன் அதன் நிர்வாகம் சமூகத்தைக் காப்பதில் அர்ப்பணிப்பைக் கொண்டிருந்தது.*

*குமாரதாஸ் நிர்வாகப்பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்கு முற்பட்ட காலத்திலும், 1920 ஆம் ஆண்டளவில் நல்லூர் கோவில் ஊடாக புதிதாகக் கண்டறியப்பட்ட இந்துமத மரபுகள் யாழ்ப்பாண மக்களுக்குப் போதிக்கப்படுவதாகக் கருதிய ஆறுமுக நாவலரைச் சார்ந்தவர்களால் கோவில் அறங்காவலர்கள் மற்றும் பூசகர்கள் தாக்கப்பட்டனர். கோவிலில் 'வேல்' வைத்து வழிபாடு செய்வது நாவலரின் உரை ஆகம முறைகளுக்குப் பொருந்தாததன் காரணமாக அதனை அகற்றவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. இருப்பினும் 'வேல்' என்பது யாழ்.மக்கள் எப்போதும் வழிபடுகின்ற ஓர் விடயமாக இருந்துவருவதாகக்கூறி அதனை அகற்றுவதற்குக் கோவில் நிர்வாகம் மறுத்துவிட்டது. ஆலயங்களின் நிலைத்த தன்மை என்பது அவற்றின் மீதான நம்பிக்கையின் அடிப்படையிலானதாகும். அவை சமூகத்தினதும் பக்தர்களினதும் நம்பிக்கையைப் பிரதிபலிக்கின்றன. குமாரதாஸின் மகனான ஷயன் இப்போது ஆலயநிர்வாகத்தை முழுமையாகப் பொறுப்பேற்றுக்கொண்டிருக்கின்றார். அவரும் அவரது துணைவியும் இணைந்து 21 ஆம் நூற்றாண்டின் சவால்களைத் திறம்பட எதிர்கொண்டு, ஆலயத்தின் பாரம்பரியத்தை அடுத்தகட்டத்திற்கு எடுத்துச்செல்வர் என்பதை நாமறிவோம்.*

**பொன்மொழி**

**ஒருவர் தாம்**
**உபதேசிப்பது போலச்**
**செய்கையில் நடக்காமல்**
**இருந்தால் அவருடைய**
**உபதேசங்கள்,**
**மணம் இல்லாத**
**பூவைப்போலப்**
**பயனற்றவை**
**ஆகும்.**

**புத்த பெருமான்**

## திருவருகை காலம்



"அவர்கள் கூரை மேல் ஏறி ஓடுகளைப் பிரித்து அவ்வழியாய் மக்கள் நடுவில் முடக்குவாத முற்ற மனிதரைக் கட்டிலோடு இயேசுவுக்கு முன் இறக்கினார்கள்" (லூக்கா 5:19)

முடக்குவாதம் என்பது நாம் சுதந்திரமாக நடந்து செல்லவும் நம் உடலுறுப்புகளை இயல்பாக இயக்கவும் முடியாவண்ணம் தடுக்கின்ற ஓர் ஊனம். சுதந்திரத்தை நாடுகின்ற மனிதருக்கு முடக்குவாதம் ஒரு பெரிய சோதனை மட்டுமல்ல, அது நம் இயலாமையை நமக்கு உணர்த்திக் கொண்டே இருக்கின்ற ஒரு முள். இவ்வாறு தம் வாழ்க்கையை இயல்பாக நடத்த முடியாமல் இருந்தார் ஒரு மனிதர். அவரால் எழுந்து சென்று இயேசுவை அணுக இயலவில்லை. படுக்கையோடு படுக்கையாக இருந்த அவருக்கு உதவி செய்ய சில நண்பர்கள் முன்வருகின்றனர். அவர்கள் வகுத்த திட்டம் எமக்கு வியப்பாக உள்ளது. மக்கள் கூட்டம் இயேசுவைச் சூழ்ந்திருந்ததால் முடக்குவாதமுற்ற மனிதரின் நண்பர்கள் வீட்டுக் கூரையைப் பிரித்து அவ்வழியாய் கட்டிலோடு அவரை இயேசுவின் முன் இறக்குகிறார்கள். அவருக்கு நலம் கொடுத்தது கடவுளின் வல்லமையோடு செயற்பட்ட இயேசு. அவரது பரிவும் இரக்கமும் அந்த மனிதரின் ஊனத்தை மட்டும் போக்கவில்லை. மாறாக, மனித வாழ்வில் ஏற்படுகின்ற அனைத்து ஊனங்களுக்கும் அடிப்படைக் காரணமாக உள்ள பாவத்தை இயேசு மன்னிக்கின்றார். யாராவது நோய் நொடியால் வருந்தினால் அதற்குக் காரணம் அவர் செய்த பாவமே என்னும் தவறான கருத்து நிலவிய அக்காலத்தில் இயேசு பாவத்தைக் காரணமாகக் காட்டி பாவிகளை ஒதுக்கவும் இல்லை, நோயுற்றவர்களே பாவத்துக்குக் காரணம் என போதிக்கவும் இல்லை.

இயேசுவில் பிரியமான சகோதரர்களே! நாமும் நோய் நொடியால் அல்லல்படும் பலரை தற்காலத்தில் காண்கிறோம். அவர்களை விலக்கி விடாது இயேசுபிரானின் வழிகாட்டல்படி அன்புடன் அரவணைப்போம்.

(சி.எல்.சிசில்)


12
கோடியுடன்
கப்ருக தோன்றுகிறது
කෝටි
12
KAPRUKA
கப்ருக
කෝටි 12 න් ඇරඹෙන යෝධ ජයමල්ල!
D 05 07 09 25 38
2021-11-31
680
1234 - 123456789 - 1 - 23
20/-
12 கோடி ரூபா அடங்கிய
மாபெரும் முதல் வெற்றியுடன்
கப்ருக இன்று முதல் புதிய தடத்துடன்
அதிக அதிக பரிசு வரங்களுடன்.
வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
நிதி அமைச்சு

# புதிய அரசு ஒன்றை உருவாக்குவதற்கு அனைத்து இன மக்களும் தயாராகிவிட்டனர்

## ஜே.வி.பி எம்.பி விஜித ஹேரத் தெரிவிப்பு



(அட்டன் நிருபர்)

இந்த அரசை விரட்டியடித்து, நாட்டைக் கட்டியெழுப்பக்கூடிய அதேபோல மக்களுக்கு சேவைகளை செய்யக்கூடிய அரசொன்றை உருவாக்குவதற்கு அனைத்து இன மக்களும் தயாராகி விட்டனர் என்று ஜே.வி.பி.யின் பிரசார செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் "ஊரிலிருந்து தொடங்குவோம்" என்ற தொனிப்பொருளிலானமக்களுடனானஉரையாடலும், துண்டுப்பிரசுர விநியோகமும் அட்டன் நகரில் இடம்பெற்றது.

நேற்று காலை 10.00 மணியளவில் அட்டன் மத்திய பேருந்து நிலையத்தில் ஆரம்பித்த நிகழ்வில் மக்கள் விடுதலை முன்னணியின் பிரசார செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத், நுவரெலியா மாவட்ட இணைப்பாளர் மஞ்சுள சுரவீர உள்ளிட்ட கட்சி உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது வியாபாரிகளிடமும், பொது மக்களிடமும் இந்த அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பாக விளக்கம் அளிக்கப்பட்டதுடன் ஆட்சி மாற்றத்தின் அவசியம் தொடர்பாகவும் வலியுறுத்தப்பட்டது.

இந்த செயற்றிட்டமானது மாவட்டத்தின் ஒவ்வொரு கிராமங்களிலும் இடம்பெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இதில் கலந்துகொண்ட பின்னர் எரிவாயு அடுப்புகள் வெடிப்பு உட்பட சமகால நிலைவரங்கள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு, நாட்டில் தற்போது எரிவாயு அடுப்புகள் வெடித்து சிதறி வருகின்றன. இதற்கான காரணங்களை கண்டறிந்து தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் அரசு துரிதம் காட்டவில்லை. மாறாக எரிவாயு அடுப்பு வெடிப்புக்கும், எரிவாயு சிலிண்டருக்கும் இடையில் எவ்வித தொடர்பும் இல்லையென ஆளுங்கட்சி உறுப்பினர்கள் சிலர் கருத்து வெளியிட்டு வருகின்றனர்.

தமது இயலாமையையும், பலவீனத்தையும் மறைப்பதற்காகவே இப்படியான கருத்துக்களை முன்வைக்கின்றனர். நாட்டில் ஏற்பட்ட மின் விநியோக துண்டிப்புக்கும் இதே பாணியில்தான் முட்டாள்தனமான கருத்துக்களை முன்வைத்துவருகின்றனர். எரிவாயு சிலிண்டர்களின் உள்ளடக்கத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாலேயே வெடிப்பு சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. அதேவேளை, சமையலறைக்கு சமைக்க செல்லும் பெண்களுக்கு இன்று உயிருக்கு உத்தரவாதம் இல்லை. எந்நேரத்தில் வெடிப்பு சம்பவம் இடம்பெறும் என்ற அச்சம் உள்ளது. இந்த அரசை விரட்டியடித்து, நாட்டைக் கட்டியெழுப்பக்கூடிய ஆட்சியை உருவாக்குவதற்கு அனைத்து இன மக்களும் தயாராகிவிட்டனர். நாளை வேண்டுமானாலும் அவர்கள் இதனை செய்வார்கள்." என்றார்.

# பாகிஸ்தானில் இலங்கையர் கொலை

## செந்தில் தொண்டமான் கடும் கண்டனம்

பாகிஸ்தானின் சியால்கோட் பகுதியில் உள்ள தொழிற்சாலை ஒன்றில் பொது முகாமையாளராக பணி புரியும் பிரியந்த குமார என்ற இலங்கையர் கொலை செய்யப்பட்டுள்ளமை கண்டனத்துக்குரியது என இ.தொ.கா.வின் உப தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையிலிருந்து வேலைக்காக பாகிஸ்தானுக்கு சென்ற இலங்கையர் கொல்லப்பட்டமையானது கண்டனத்துக்குரியது என்றும், இச்சம்பவம் தொடர்பில் பாகிஸ்தான் அரசு உடனடியாக பொறுப்பு கூற வேண்டும் என்றும், இவ்வாறான காட்டுமிராண்டித்தனமான செயலில் ஈடுபட்டவர்களின் மீது பாகிஸ்தான் அரசு உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுடன், தண்டனை வழங்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

மேலும் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு இலங்கை அரசு உதவி வழங்க வேண்டும் எனவும் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

மலையக செய்திகள்

# கொட்டகலை வாகன விபத்தில் ஒருவர் படுகாயம்



(அட்டன் நிருபர்)

நுவரெலியா–அட்டன் பிரதான வீதியில் கொட்டகலை டிரேட்டன் பகுதியில் நேற்று முன்தினம் (04) இரவு லொறியும் முச்சக்கரவண்டியும் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்துள்ளதாக திம்புள்ள பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

முச்சக்கர வண்டியின் சாரதியே இவ்வாறு படுகாயமடைந்து கொட்டகலை பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பத்தனையிலிருந்து கொட்டகலை பகுதியை நோக்கி சென்ற பேக்கரி உணவுகளை விற்பனை செய்யும் நடமாடும் குறித்த முச்சக்கர வண்டி, தலவாக்கலையிலிருந்து அட்டன் பகுதியை நோக்கி சென்ற லொறி ஒன்றுடன் பின்புறத்தில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதுடன், விபத்தில் முச்சக்கரவண்டி பலத்த சேதமடைந்துள்ளது.

குறித்த லொறியுடன், லொறியின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இவ்விபத்து குறித்து திம்புள்ள பத்தனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பாராளுமன்ற அமர்வில் என்னுடைய பேச்சுரிமை மறுக்கப்பட்டுள்ளது

## வடிவேல் சுரேஷ் எம்.பி. தெரிவிப்பு

பாராளுமன்ற அமர்வில் மலையக மக்களின் சார்பாக குரல் எழுப்ப இருந்த சந்தர்ப்பத்தில் எங்களுடைய உரிமைக்குரல் நசுக்கப்பட்டிருக்கின்றது என பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஷ் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

பாராளுமன்றத்தில் அதிமுக்கிய அமைச்சுக்களின் குழுநிலை விவாதத்தில் கருத்து தெரிவிக்க இருந்த சந்தர்ப்பத்தில் எங்களுடைய ஜனநாயக உரிமையை மீறி ஆளும் கட்சி உறுப்பினர்கள் எதிர்க்கட்சி உறுப்பினர்களை தாக்க முற்பட்டதன் விளைவாக நானும் என்னுடைய சக பாராளுமன்ற உறுப்பினர்களும் பாராளுமன்ற நடவடிக்கையை புறக்கணித்து வெளிநடப்பு செய்தோம்.

தொழில் அமைச்சின் குழுநிலை விவாதத்தில் பெருந்தோட்ட மலையக மக்கள் அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவினால் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருவதால் இன்றைய விலைவாசிக்கேற்ப அவர்களுடைய நாளாந்த வேதனம் 2,500 ரூபாய் ஆக உயர்த்தப்பட வேண்டும், உடனடியாக சம்பள நிர்ணய சபை ஒன்று கூட வேண்டும் என்ற கோரிக்கையை பாராளுமன்றத்தில் முன் வைக்க இருந்த சந்தர்ப்பத்தில் என்னுடைய பேச்சுரிமை மறுக்கப்பட்டிருக்கிறது.

பாராளுமன்றத்திற்குள் உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு இல்லையெனில் நாட்டு மக்களுக்கு எங்கிருந்து பாதுகாப்பு கிடைக்கும் என்ற பாரியதொரு கேள்வி எம் மத்தியில் நிலவுகின்றது. வாழ்க்கை செலவு அதிகரித்து வருகின்றது, இன்று பேச்சுரிமையும் மறுக்கப்பட்டிருக்கிறது என தெரிவித்தார்.

# பசறையில் எரிவாயு அடுப்பு வெடிப்பு



(பதுளை நிருபர்)

பசறை கோணக்கலை வீரன்புறம் பகுதியில் வீடொன்றில் நேற்று முன்தினம் இரவு எரிவாயு கசிவு ஏற்பட்டு விபத்து ஏற்பட்டுள்ளது.

குறித்த எரிவாயு அடுப்புக்கு பொருத்தப்படும் குழாய் பகுதியில் தீப்பிடித்துள்ளது. வீட்டாரின் முயற்சியால் தீ அணைக்கப்பட்டு பெரும் விபத்து தவிர்க்கப்பட்டுள்ளது.

# தொழிலாளர் தேசிய சங்கத்தின் பொங்கல் விழா

( பானா. தங்கம் )

தொழிலாளர் தேசிய சங்கத்தின் 2022ஆம் ஆண்டுக்கான புத்தாண்டுக் கொண்டாட்டத்துடன் கூடிய தைப்பொங்கல் விழா சங்கத்தின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தலைமையில் எதிர்வரும் ஜனவரி மாதம் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அட்டன் டி.கே.டபுள்யூ.கலாசார மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சங்கத்தின் பிரதித் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான எம்.உதயகுமார், பொதுச்செயலாளர் எஸ்.பிலிப், மத்திய மாகாண சபை முன்னாள் உறுப்பினர்களான பிரதி நிதிச் செயலாளர் சோ.ஸ்ரீதரன், மகளிர் அணித் தலைவி சரஸ்வதி சிவகுரு உட்பட கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்கள்.

மேற்படி பொங்கல் விழாவில் தொழிலாளர் தேசிய சங்கத்தின் வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்த சிரேஷ்ட உறுப்பினர்கள், மலையகத்தின் மூத்த கலைஞர்கள், எழுத்தாளர்கள், சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்கள், விளையாட்டு வீரர்கள் முதலானோர் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளதாகவும் அதற்கான விபரங்கள் திரட்டப்பட்டு வருவதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

# பலவந்தமாக மூடப்பட்டுள்ள வீதியை திறக்கக்கோரி கிரான்குளத்தில் ஆர்ப்பாட்டம்









(காங்கேயனோடை நிருபர்)

மட்டக்களப்பு, கிரான்குளம் பிரதேசத்தில் 15 வருட காலமாக பயன்படுத்தி வந்த வீதியொன்றை பலவந்தமாக மூடிவைத்திருப்பதற்கு கண்டம் தெரிவித்தும் அவ்வீதியை மீண்டும் திறக்கக் கோரியும் கிரான்குள பிரதான வீதி ஸ்ரீ மஹா விஷ்ணு ஆலயத்துக்கு முன்பாக நேற்று (05) பொதுமக்கள் கவனஈர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கிரான்குளம், அமரபுரம் கிராமத்தைச் சேர்ந்த பொதுமக்கள் கடந்த 15 வருடங்களாக பயன்படுத்தி வந்த கிரான்குளம், புதுக்குடியிருப்பு வீதியை காணி சீர்திருத்த ஆணைக்குழு அதிகாரி அடைத்து வைத்துள்ளதால் பொதுமக்கள், மாணவர்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இந்நிலையிலேயே குறித்த பாதையை திறக்குமாறு கோரி இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இவ்ஆர்ப்பாட்டத்தில் மண்முனைப்பற்று தவிசாளர் டி.தயானந்தன் உட்பட மண்முனை பிரதேச சபை உறுப்பினர்கள் சிலரும் கலந்து கொண்டனர்.

15 வருடமாக பயன்படுத்திய பாதையை அநியாயமாக மூடாதே, காணித்திருடனுக்கு காணி ஆணையாளர் பதவியா, அரசே காணித் திருட்டு கும்பல்களை விசாரணை செய் போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் தாங்கியிருந்தனர்.

இதேநேரம் மேற்படி ஆர்ப்பாட்டத்துக்கு எதிராக கிரான்குளம் கதிரவன் விளையாட்டுக்கழக உறுப்பினர்கள் சிலர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

எமது விளையாட்டுக்கழக மைதானத்தை மீட்பதற்காகவே நாம் போராடிக்கொண்டிருக்கின்றோம். எனவே மைதானத்தை எமக்கு தரவேண்டும் என்றும் அரசியல் இலாபத்துக்கு பொதுமக்களுக்கு பணத்தையும் சாராயத்தையும் கொடுத்து மக்களை அழைத்து வந்து தவிசாளர் ஆர்ப்பாட்டம் செய்கின்றார் எனவும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

இதனையடுத்து அங்கு வருகை தந்த காத்தான்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி துமிந்த நயன சிறி இரண்டு ஆர்ப்பாட்டக்காரர்களுடனும் கலந்துரையாடியதன் பின்னர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் கலைந்து சென்றனர்.

எனினும் மண்முனைப்பற்று பிரதேச சபைக்குள்ள அதிகாரங்களின் அடிப்படையில் அடைத்து வைக்கப்பட்டிருந்த வீதியை மண்முனைப்பற்று பிரதேச சபை தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் அதிகாரிகள் ஆகியோரினால் திறக்கப்பட்டு பொதுமக்களின் பாவனைக்கு விடப்பட்டதாக மண்முனைப்பற்று பிரதேச சபை தவிசாளர் டி.தயானந்தன் தெரிவித்தார்.

# நிர்வாக எல்லைகள் பிரிக்கப்படுவதை ஏற்க முடியாது

## கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் பிரசாந்தன்

( களுவாஞ்சிக்குடி நிருபர் )

கிராம சேவகர் பிரிவுகளின் எண்ணிக்கையைக் குறைத்து, எஞ்சிய பிரிவுகளை இணைத்து எல்லைகள் பிரிக்கப்படுவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் பூ.பிரசாந்தன் தெரிவித்தார்.

எல்லைகள் நிர்ணயம் செய்வது தொடர்பாக வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

ஒவ்வொரு பிரதேச செயலக மட்டங்களிலும் கிராம சேவையாளர் பிரிவுகளை குறைத்து எல்லைகள் நிர்ணயம் செய்வது தொடர்பான ஆலோசனைகள் இடம்பெற்று வருகின்றன. அவ்வாறு எல்லைகள் நிர்ணயம் செய்யப்படுவதனால் அபிவிருத்திக்கென வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்படும் நிதி குறைக்கப்பட்டு மக்களுக்கான பொதுவசதிகள் முற்றாக பாதிப்படைய வாய்ப்புள்ளது.

அரச உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் குடும்பநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உட்பட அரச சேவையாளர்களின் ஆளணி மட்டுப்படுத்தப்பட்டு வேலையற்றோர் எண்ணிக்கை அதிகரிக்கப்படும்.

ஒவ்வொரு பிரதேசமும் நகரமயமாக்கலை நோக்கி முன்னேற்றமடையும் வேளையில், இவ்வாறான செயற்பாடுகள் முற்றிலும் நிலைமையை சீரழிக்கும். கிராம சேவையாளர் பிரிவுகள் குறைக்கப்பட்டு எல்லைகள் நிர்ணயம் செய்தவை இணையும்போது நிர்வாகக் கட்டமைப்பு முற்றாக பாதிக்கப்பட்டு இன, சமூக கட்டமைப்புகள் மாற்றமடைவதன் மூலம் முரண்பாடுகள் தோற்றம் பெறும்.

எல்லைகள் நிர்ணயம் செய்யப்படுவதனால் குறித்த கிராமத்தின் கிராம சேவையாளர் பிரிவுகளுக்குரிய தனித்துவ கோட்பாடுகள் பாதிக்கப்படுவதுடன் கிராம மட்ட அமைப்புகள், தலைமைத்துவம் என்பனவற்றில் பாரிய விரிசல் ஏற்படும். இது சமூகத்தின் நிலைபேறான வலுவாக்க அபிவிருத்திக்கு அப்பால், நீண்ட பிரிவினையை ஏற்படுத்தும். அது மட்டுமல்லாது கிராம மக்கள் தமது அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதில் பெரும் சிரமப்பட வேண்டி ஏற்படும். எனவே இதனை தடுத்து நிறுத்தி தற்போதுள்ளவாறு நிர்வாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றார்.

கிழக்கு செய்திகள்

# ரயிலில் மோதுண்டு குடும்பஸ்தர் உயிரிழப்பு



(பட்டிருப்பு,மண்டூர் மேலதிக நிருபர்கள்)

மட்டக்களப்பு பொலிஸ் தலைமையகத்துக்குட்பட்ட திராய்மடு பகுதியில் நேற்று அதிகாலை புகையிரதத்தில் மோதுண்டு குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

திராய்மடு மூன்றாம் குறுக்கு வீதியில் வசிக்கும் செல்லையா அசோக்குமார் (43 வயது) என்பவரே மேற்படி சம்பவத்தில் உயிரிழந்துள்ளவராவார்.

குறித்த பகுதிக்கு வந்த மட்டக்களப்பு மாவட்ட குற்றத்தடயவியல் பிரிவு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த அதேநேரம் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிபதியின் பணிப்புரைக்கமைய களுவாஞ்சிக்குடி பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி சிதம்பரப்பிள்ளை ஜீவரெத்தினம் பிரேதத்தை பார்வையிட்டதுடன் விசாரணைகளை முன்னெடுத்து, பிரேதத்தை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்று உடற்கூற்றுப் பரிசோதனைக்குட்படுத்தும்படி பொலிஸாரிடம் உத்தரவிட்டார்.

குறித்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# யானை தாக்கி ஒருவர் உயிரிழப்பு

(மாமாங்கம் நிருபர்)

யானை தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளதாக கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர். தும்பலாஞ்சோலை பகுதியில் சனிக்கிழமை (04) இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் 6 பிள்ளைகளின் தந்தையான கனகன் முருகேன் (60வயது) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான விசாரணைகளை கரடியனாறு பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழித்தல்; தம்பலகாமத்தில் நடை பவனி

( நிலாவெளி,திருகோணமலை மேலதிக நிருபர்கள்)

பெண்களுக்கு எதிரான வன்முறைகளை முடிவுக்கு கொண்டு வருதல் 16 நாள் செயற்பாட்டின் ஒரு பகுதியாக தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவில் நடைபவனியொன்று இடம்பெற்றது.

திருகோணமலை மாவட்ட பெண்கள் வலையமைப்பின் ஏற்பாட்டில் கடந்த 04 ஆம் திகதி தம்பலகாமம் பிரதேச செயலகத்திலிருந்து ஆரம்பமான நடைபவனி குளக்கோட்டன் தமிழ் வித்தியாலயம் வரை சென்றது.

பெண்களை பாதுகாப்போம், உலக வேலைத் தளங்களில் பாலியல் வன்முறைகளை முடிவுறுத்தல், பெண்களுக்கான சமத்துவத்தை பெற்றுக்கொடுப்போம், பெண்கள் மீதான வன்முறைகளுக்கான தீர்வுகள் உடனடியாக வழங்கப்பட வேண்டும், பெண்கள் மீதான வன்முறைகள் சிறப்பு நீதிமன்றங்கள் ஊடாக விசாரணை செய்யப்பட வேண்டும் போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளை நடை பவனியில் சென்றோர் ஏந்திச் சென்றனர்.

உலகளாவிய ரீதியில் பெண்களுக்கெதிராக இழைக்கப்படும் வன்முறைகளுக்கு எதிராக குரல் கொடுப்பதையும் அவர்களை பாதுகாப்பதை உறுதி செய்யும் வகையிலும் உலக மக்களை வலுவூட்டும் செயற்றிட்டமாக ஆண்டு தோறும் கார்த்திகை 25 ஆம் திகதியிலிருந்து மார்கழி 10 வரை 16 நாட்கள் பெண்களின் ஆதரவுக்கான அணி திரட்டும் காலமாக அனுஷ்டிக்கப்படுகிறது.

இத்தினத்தை நினைவு கூரும் முகமாக இவ்வாறான விழிப்புணர்வு நடைபவனி இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி, திருகோணமலை மாவட்ட பெண்கள் வலையமைப்பின் தலைவி சட்டத்தரணி பிரசாந்தினி உதயகுமார், செயலாளர் ஊர்மிலா, தம்பலகாமம் பிரதேச செயலக பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.பாமினி, பெண்கள் அபிவிருத்தி வெளிக்கள உத்தியோகத்தர் நஸ்ரின் டிலானி, சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் ரியால் உட்பட மகளிர் அணியினர் எனப் பலர் கலந்துகொண்டனர்.





சிரேஷ்ட ஊடகவியலாளர் பி.மாணிக்கவாசகம் எழுதிய 'மாற்றத்தை நாடும் மாற்றுத்திறனாளிகள்' நூல் வெளியீடு மன்னாரில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. வீகேன் (WeCan) மாந்தை மேற்கு மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் வெற்றிச்செல்வி சந்திரகலா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மன்னார் மாவட்ட விவசாயப் பணிப்பாளர் திருமதி அ.சகிலா பானு முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு நூலை வெளியிட்டுவைப்பதையும் முதற்பிரதியை பெற்றுக்கொள்வதையும் திருமதி மாணிக்கவாசகம் உட்பட முக்கியஸ்தர்களையும் படங்களில் காணலாம்.



ஐக்கிய பெண்கள் சக்தியினால் ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று முன்தினம் செம்மஞ்சள் நிற ஒளி விளக்கேற்றி ஒளிர விடப்பட்டது. நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக எம்.பி.க்களான மனோ கணேசன், வடிவேல் சுரேஷ், வேலுகுமார் மற்றும் வெள்ளவத்தை மயூரபதி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலய அறங்காவலர் சபை உறுப்பினர் திருமதி சுதர்சினி கிலர்பதி, ஐக்கி பெண்கள் சக்தி உப தலைவர் உமாச்சந்திரா பிரகாஷ் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

(படப்பிடிப்பு : ஜே.சுஜீவகுமார்)

# தேசத்துக்கு சிறந்த சேவைகளைப் பெற்றுக்கொடுப்பதில்

## 90 வருட காலத்தைப் பூர்த்தி செய்யும் அரச ஈட்டு முதலீட்டு வங்கி (SMIB)

தேசத்துக்கு சிறந்த சேவைகளைப் பெற்றுக்கொடுப்பதில் அரச ஈட்டு முதலீட்டு வங்கி (SMIB) 90 வருட காலத்தை 2021 டிசம்பர் 6ஆம் திகதி பூர்த்தி செய்துள்ளது.

சிலோன் அரச ஈட்டு வங்கி (CSMB) எனும் நாமத்தில் 1931ஆம் ஆண்டு டிசம்பர் 6ஆம் திகதி அரச ஈட்டு முதலீட்டு வங்கி (SMIB) ஸ்தாபிக்கப்பட்டது. 1975ஆம் ஆண்டின் அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கிச் சட்ட இல.13 இன் பிரகாரம் சிலோன் அரச ஈட்டு வங்கி மற்றும் விவசாய மற்றும் தொழிற்துறை கடன் கூட்டுத்தாபனத்தை இணைத்து அரச ஈட்டு முதலீட்டு வங்கி (SMIB) நிறுவப்பட்டது.

1979ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் திகதி அரச ஈட்டு முதலீட்டு வங்கி (SMIB) தனது செயற்பாடுகளை ஆரம்பித்திருந்தது. 1988ஆம் ஆண்டின் வங்கியியல் சட்ட இல.30இன் பிரகாரம், 1998ஆம் ஆண்டு ஏப்ரல் 27ஆம் திகதி முதல் விசேடத்துவ வங்கியாக செயற்படுவதற்கு இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

வங்கி தொடர்ச்சியான வளர்ச்சி மற்றும் வெற்றிகரமான செயற்பாடுகள் தொடர்பில் நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளதுடன், 'தேசத்தின் வீடமைப்பு வங்கியாளர்" எனும் பிரத்தியேகமான அடையாளத்தை தன்னகத்தே கொண்டுள்ளது. நாட்டில் ஈட்டு அடிப்படையிலான கடன் வழங்கல் செயற்பாடுகளை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்ல SMIB உதவியிருந்ததுடன், தொடர்ச்சியான 90 வருட வரலாற்று காலப்பகுதியில், வீடமைப்பு நிதித் தேவைகளை நிவர்த்தி செய்வதில் ஈட்டு அடிப்படையிலான கடன் வழங்கல்களில் முன்னோடியாக அரச ஈட்டு முதலீட்டு வங்கி (SMIB) திகழ்கின்றது.



**கலாநிதி உதயஸ்ரீ காரியவசம்**
தலைவர்



**திரு.லுஷாந்த ரணசிங்க**
இடைக்கால பொது முகாமையாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி

வங்கியின் இந்த முக்கியத்துவம் வாய்ந்த மைல்கல் பூர்த்தி தொடர்பில் அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் தலைவர் கலாநிதி. உதயசிறி காரியவசம் கருத்து தெரிவிக்கையில்,

'தேசத்தின் முன்னணி வீடமைப்பு நிதித் தீர்வுகளை வழங்குநர் எனும் வகையில், 90 வருடகால சேவையை பூர்த்தி செய்துள்ளதையிட்டு நாம் மிகவும் திருப்தியும், பெருமையும் கொள்கின்றோம். கடந்த காலங்களில் பல இலங்கையர்களின் இல்லக்கனவுகளை நனவாக்குவதில் முக்கிய பங்களிப்புச் செய்து, மக்களின் வாழ்க்கையில் மாற்றங்களை ஏற்படுத்துவதில் பாரியளவிலான பங்களிப்பை வங்கி வழங்கியுள்ளது. எமது ஊழியர்களின் அர்ப்பணிப்பான செயற்பாடுகளின் அடிப்படையில் வங்கி வெற்றிகரமாக இயங்கி வருவதுடன், தேசத்துக்கு சேவையாற்றுவது எனும் எமது பொதுவான நோக்கத்தின் அடிப்படையில் நாம் இயங்குவதுடன், தேசத்தின் மக்களுக்கு சிறந்த நிதித்தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பது தொடர்பில் நாம் கவனம் செலுத்தி வருகின்றோம். எமது வெற்றிகரமான பயணத்தில், எமது ஊழியர்கள், நலன் விரும்பிகள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு இந்தத் தருணத்தில் நான் நன்றி தெரிவிக்கின்றேன். நிதிச் சேவைகள் துறையில் டிஜிட்டல் மயமாக்கத்துடன் எழுந்துள்ள புதிய வாய்ப்புகளைக் கொண்டு, வங்கியின் அடுத்த கட்ட வளர்ச்சி என்பது அதிகளவு விறுவிறுப்பானதாகவும், சுபீட்சமானதாகவும் அமைந்திருக்கும். எமது வளர்ச்சிப் பயணத்தில் கைகோர்க்குமாறு சகல பங்காளர்களையும் அழைக்கின்றேன்" என்றார்.

கடந்த ஆண்டுகளில் வங்கியின் விரிவாக்கத்துடன், ஈட்டுக் கடன்கள் எனும் தனது பிரதான தீர்விலிருந்து, வாடிக்கையாளர்களின் பரந்த வங்கியியல் தேவைகளை நிவர்த்தி செய்யும் வகையில், தனது சேவை வழங்கல்களை மேலும் பல பிரிவுகளுக்கு விஸ்தரித்து, வங்கி தனது நிலையை உறுதி செய்துள்ளது. 2001ஆம் ஆண்டு வங்கிப் புத்தக சேமிப்பு கணக்கின் அறிமுகத்துடன், வங்கி தனது சேவை வழங்கல்களை நிலையான வைப்புகள் மற்றும் சேமிப்பு கணக்கின் அறிமுகத்துடன், வங்கி தனது சேவை வழங்கல்களை நிலையான வைப்புகள் மற்றும் சேமிப்புத் தீர்வுகள் வழங்கலுக்கு விஸ்தரித்திருந்தது. இதனூடாக, வாடிக்கையாளர்களின் பரந்த மாறுபட்ட தேவைகளை நிவர்த்தி செய்துள்ளதுடன், தொடர்ச்சியாக தனது ஈட்டு அடிப்படையிலான வீட்டுக் கடன் தீர்வுகளை விஸ்தரித்து, தேசத்தின் அதிகளவு நாடப்படும் வீடமைப்பு கடன் வழங்குநராக திகழ்கின்றது.

வங்கியின் 90 வருட பூர்த்தி தொடர்பில், அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் இடைக்கால பொது முகாமையாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரியான லுஷாந்த ரணசிங்க கருத்துத் தெரிவிக்கையில்,

'இந்த முக்கியத்துவம் வாய்ந்த தருணத்தில், ஒன்பது தசாப்த காலமாக இலங்கையர்களின் வீடமைப்பு கனவுகளை நிவர்த்தி செய்வதில் அரச ஈட்டு முதலீட்டு வங்கி முன்னணியில் திகழ்கின்றது என்பதை அறிவிப்பதையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். கடன் வழங்கல் வியாபாரப் பிரிவில் வங்கி உறுதியான சந்தைப் பிரசன்னத்தைக் கொண்டுள்ளதுடன், பரந்தளவு வாடிக்கையாளர்களை சென்றடைந்து, அவர்களின் வீடமைப்புடன் தொடர்புடைய வெவ்வேறு நிதித் தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக வீடமைப்பு நிதியளிப்பு, ஈட்டு அடிப்படையிலான கடன்கள் மற்றும் சிறிய நடுத்தரளவு தொழில் முயற்சியாண்மைகளுக்காக விசேடத்துவம் வாய்ந்த கடன் வழங்கல் திட்டங்கள் போன்றன அடங்கியிருந்தன. விசேடத்துவம் வாய்ந்த வங்கியாக SMIB தன்னை நிலைநிறுத்தியுள்ளதுடன், தனி நபர்களுக்காக நிதித் தீர்வுகளை வழங்கும் முன்னணி வங்கி என்பது மாத்திரமன்றி, அரசாங்க நிறுவனங்கள் மற்றும் செயற்திட்டங்களுக்கும் நிதி வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளதனூடாக, தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தில் 90 வருட காலமாக பங்களிப்பு வழங்கி வருகின்றோம். பிரதான வாடிக்கையாளர்கள் குழுக்களுக்கு ஓய்வூதியம் பெறுவோருக்கான கடன்கள் மற்றும் விசேட ஊழியர் சேமலாப நிதிய கடன் வசதிகள் போன்ற விசேடத்துவம் வாய்ந்த தீர்வுகளை ஏற்படுத்திக் கொடுத்து, சகலருக்கும் கடன் வசதியைப் பெற்றுக்கொள்ளும் வசதியை ஏற்படுத்திக் கொடுத்துள்ளதில் பெருமை கொள்கின்றோம். நிதி வசதிகளை வழங்கல் என்பதில் கவனம் செலுத்துவதற்கு மேலதிகமாக, வங்கி தனது சேவை வழங்கல்களில் சேமிப்புகள் மற்றும் வைப்புகள் போன்ற தீர்வுகளையும் வழங்குகின்றது. குறிப்பாக சிறுவர் சேமிப்புக் கணக்குகளில் அதிகளவு கவனம் செலுத்தப்படுகின்றன. தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் வசதிகளுடன், எமது நிலையை தேசத்தினதும், நாட்டு மக்களினதும் முன்னணி வங்கியியல் பங்காளராக எமது நிலையை நாம் மேலும் வலிமைப்படுத்தியுள்ளதுடன், எதிர்வரும் காலத்திலும் தொடர்ந்து சிறந்த சேவைகளைப் பெற்றுக்கொடுக்கத் தயாராகவுள்ளோம்" என்றார்.

தேசிய பொருளாதார அபிவிருத்தியில் சிறிய மற்றும் நடுத்தரளவு வியாபாரங்களின் (SME) முக்கியத்துவத்தை உணர்ந்து, வெவ்வேறு தொழிற்துறைகளைச் சேர்ந்த சிறிய நடுத்தரளவு வியாபாரங்களை வலிமைப்படுத்தும் வகையிலான செலவு வினைத்திறனான நிதியியல் தெரிவுகள் மற்றும் ஆலோசனை சேவைகள் போன்றவற்றை உள்ளடக்கிய நிதியியல் தந்திரோபாயங்களை வங்கி பின்பற்றுகின்றது.

நாட்டின் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில் அமைந்துள்ள 25 கிளைகளினூடாக வங்கி தனது சேவைகளை வழங்குகின்றது. தனது அடுத்தகட்ட வளர்ச்சியில், டிஜிட்டல் செயற்படுத்தப்பட்ட தொடுகைப் பகுதிகளினூடாக தனது கிளைப் பிரசன்னத்தை மேம்படுத்தி, அவற்றினூடாக வாடிக்கையாளர்களுக்கு அதிகளவு சௌகரியம் மற்றும் அணுகல் திறனை ஏற்படுத்திக் கொடுக்க அரச ஈட்டு முதலீட்டு வங்கி முன்வந்துள்ளதுடன், இலங்கையின் தனிநபர்கள் மற்றும் வியாபாரங்களுக்கிடையே அதிகரித்துச் செல்லும் நிதித் தேவைகளை நிவர்த்தி செய்யும் வகையிலமைந்த நிதிச் சேவைகளைப் பெற்றுக் கொடுக்கும். தனது 90 வருட பூர்த்தியை முன்னிட்டு தொடர்ச்சியான நிகழ்வுகள், விறுவிறுப்பான செயற்பாடுகள் மற்றும் வியாபார ஊக்குவிப்பு நடவடிக்கைகள் போன்றவற்றை முன்னெடுக்க வங்கி திட்டமிட்டுள்ளது.

ராஜ்ய உகஸ் ஹா ஆயோஜன பாங்குவ
அரச ஈட்டு முதலீட்டு வங்கி
State Mortgage & Investment Bank
ஜாதியே நிவாச பாங்குவ





நம்பிக்கையான 90 ஆண்டுகள்

90 ஆண்டுகாலமாக எமது வாடிக்கையாளர்களின்
இதயங்களில் அசைக்க முடியாத நம்பிக்கையை ஏற்படுத்தி இந்த
பெருமைக்குரிய பயணத்தில் எம்மோடு
கைக்கோர்திருக்கும் உங்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்.

உன்னதமான, நம்பிக்கையான சேவைகளை எதிர்காலத்திலும்
உங்களுக்கு வழங்க நாம் எம்மை அர்ப்பணித்துள்ளோம்.

அரச ஈட்டு முதலீட்டு வங்கி
State Mortgage & Investment Bank

1922
www.smib.lk

269, காலி வீதி, கொழும்பு 03. | மின்னஞ்சல்: info@smib.lk
ICRA (SL) BBB+ | அரச அடமானம் மற்றும் முதலீட்டு வங்கி என்பது இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையில் உரிமம் பெற்ற சிறப்பு வங்கியாகும்.

## எந்த நாட்டிலிருந்து...

(தொடர்ச்சி)

இது தொடர்பில் இலங்கை மருத்துவ சங்கம் சுகாதாரத்துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தென் ஆபிரிக்காவில் அபாயம் மிக்க ஓமிக்ரோன் பிறழ்வு இனங்காணப்பட்டவுடனேயே 6 நாடுகளிலிருந்து பயணிகள் இலங்கைக்கு வருவதற்கு தடை விதிப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்தமைக்கு சுகாதார அமைச்சருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எவ்வாறிருப்பினும் தற்போதும் இந்த 6 நாடுகளிலிருந்து வரும் பயணிகளுக்கு மாத்திரமே தடை விதிக்கப்பட்டுள்ளது. எனினும் தற்போது 'ஓமிக்ரோன்' பிறழ்வானது ஐரோப்பா, அவுஸ்திரேலியா மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளிலும் பரவியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் தற்போது இலங்கைக்குள்ளும் இப்பிறழ்வு நுழைந்துள்ளது.

எனவே எந்த நாட்டிலிருந்து வருகை தந்தாலும் வரும் அனைவரும் விமான நிலையத்தில் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று இலங்கை மருத்துவ சங்கம் வலியுறுத்துகின்றது. அத்தோடு நாட்டிலுள்ள 60 வயதுக்கு மேற்பட்ட பிரஜைகளுக்கான தடுப்பூசி வழங்கல் துரிதப்படுத்தப்பட வேண்டும் என்பதையும் இலங்கை மருத்துவ சங்கம் வலியுறுத்துகிறது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பாகிஸ்தான்...

(தொடர்ச்சி)

இந்த சம்பவத்தை மையப்படுத்தி குறுகிய நோக்கங்களுக்காக அசம்பாவிதங்களை தோற்றுவிக்க எவரேனும் முயற்சிக்கலாம் என்ற அடிப்படையில், உளவுத் துறையினர் ஊடாக உரிய தகவல்களைப்பெற்று, அவ்வாறான நாசகார செயல்களை முறியடிக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பொலிஸ் மா அதிபர் சந்தன விக்கிரமரத்னவுக்கு விஷேட அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

கொலை செய்யப்பட்ட இலங்கை முகாமையாளர் பிரியந்த குமாரவின் சடலம் இன்று (06) நாட்டுக்கு எடுத்து வரப்படும் நிலையில், குறுகிய சிந்தனை கொண்டவர்கள் நாசகார செயல்களில் ஈடுபட முயல்கின்றனரா என்பதை உளவுத் துறையூடாக கண்காணித்து தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி பொலிஸ் மா அதிபருக்கு இவ்வாறு கண்டிப்பான ஆலோசனையை வழங்கியுள்ளதாக பொலிஸ் தலைமையக தகவல்கள் தெரிவித்தன.

இந்நிலையில் நாடளாவிய ரீதியில் உளவுத் துறையினர் உசார் செய்யப்பட்டு, இது தொடர்பில் போதுமான தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருவதுடன் அவசியம் ஏற்படும் பட்சத்தில் கைது நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் பொலிஸாருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

## வரவு...

(தொடர்ச்சி)

ஆளும் கட்சிக்கும் பங்காளிக் கட்சிகளுக்கும் இடையிலான முரண்பாடுகளுக்கு தீர்வு காண்பது அவசியமாகும் என பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தில் பொதுஜன பெரமுன மாத்திரம் பிரதான கட்சியல்ல. கூட்டணியில் உள்ள ஏனைய பங்காளிக் கட்சிகளின் கருத்துக்களுக்கும் முன்னுரிமை வழங்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு.

அரசாங்கத்தின் ஒரு சில செயற்பாடுகள் சுபிட்சமான எதிர்கால கொள்கைத் திட்டத்துக்கு முரணாக உள்ளது. தவறுகளை சுட்டிக்காட்ட வேண்டிய பொறுப்பு கூட்டணியின் பங்காளிக் கட்சிகளுக்கு உண்டு. தவறுகள் சுட்டிக்காட்டப்படும் போது பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களினால் பங்காளிக்கட்சியினர் தொடர்ந்து விமர்சிக்கப்படுகிறோம்.

கூட்டணியில் காணப்படும் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண அரச தலைவர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட பலமுறை முயற்சி செய்தும் பயனளிக்கவில்லை. பிரதமருடன் இடம்பெறவிருந்த பேச்சுவார்த்தைகளுக்கு பலமுறை தடை ஏற்படுத்தப்பட்டன.

2022ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்புக்கு முன்னர் ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் விசேட பேச்சுவார்த்தையில் ஈடுபட தீர்மானித்துள்ளோம். ஆளும் கட்சிக்கும் பொதுஜன பெரமுனவுக்கும் இடையிலான முரண்பாடுகளுக்கு தீர்வு காண்பது அவசியமாகும்.

பொருளாதார ரீதியில் மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளார்கள். 2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் பெற்றுக்கொள்ளும் வகையில் காணப்படவில்லை.மக்களுக்கு நிகழ்காலத்தில் நிவாரணம் வழங்காமல் எதிர்காலம் குறித்து கவனம் செலுத்துவது பயனற்றதாகும் என்றார்.

## பாகிஸ்தான் சம்பவத்தை...

(தொடர்ச்சி)

எனினும் இந்த சம்பவத்தைப் பயன்படுத்தி இலங்கையில் இனங்களுக்கிடையில் முரண்பாட்டை தோற்றுவிக்க முயற்சிப்பதை அனுமதிக்கக் கூடாது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் ,பாகிஸ்தானில் இடம்பெற்ற சம்பவத்துக்கு ஐக்கிய மக்கள் சக்தி கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறது. இவ்வாறான அடிப்படைவாத செயற்பாடுகள் மனதாபிமானத்துக்கு முற்றிலும் எதிரானவையாகும்.

எனவே பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நீதியை நிலைநாட்ட வேண்டிய பொறுப்பு பாகிஸ்தான் அரசாங்கத்துக்கு இருக்கிறது. எனவே சட்டத்தில் எவ்வித தளர்வுகளும் இன்றி குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்.கொல்லப்பட்ட நபரின் மனைவி பிள்ளைகள் உள்ளிட்ட குடும்பத்தாரின் எதிர்காலம் தற்போது கேள்விக்குறியாகியுள்ளது.

எனவே இலங்கையிலுள்ள வெளிநாட்டலுவல்கள் அமைச்சு தலையிட்டு பாகிஸ்தான் அரசாங்கம் மற்றும் குறித்த நபர் தொழில்புரிந்த தொழிற்சாலை உரிமையாளர்கள் ஊடாக நியாயத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

எந்த நாடாக இருந்தாலும் இவ்வாறான அடிப்படைவாத செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் போது, அவற்றுக்கு எதிராக அனைத்து நாடுகளும் ஒன்றிணைந்து குரல் கொடுக்க வேண்டும். எவ்வாறிருப்பினும் தற்போது இந்த சம்பவத்தை தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு சில வங்குரோத்து அரசியல்வாதிகள் இலங்கையில் இனங்களுக்கிடையில் முரண்பாடுகளைத் தோற்றுவிக்க முயற்சிக்கின்றனர்.

எனவே சமூக வலைத்தளங்களில் சில அரசியல்வாதிகள் இவ்வாறு பதிவிடப்பட்டுள்ள கருத்துக்கள் தொடர்பில் அவதானம் செலுத்தி நாட்டில் அமைதியை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ்மா அதிபரிடம் கோருகின்றோம் என்றார்.

## சப்புகஸ்கந்த...

(தொடர்ச்சி)

அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு அவற்றை பயன்படுத்த வேண்டும். தற்போதைய நெருக்கடி நிலையை முகாமைத்துவம் செய்வதற்காக சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை தொடர்ந்து 50 நாட்களுக்கு மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என வலுசக்தி அமைச்சர் நவம்பர் மாதம் 15 ஆம் திகதி குறிப்பிட்டார்.

அதற்கமைய கடந்த மாதம் 15ஆம் திகதி மூடப்பட்ட சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் 22 நாட்களுக்கு பிறகு நாளை மீண்டும் திறக்கப்படவுள்ளது. அது தொடர்பில் வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

அந்நியசெலாவணி கையிருப்பு வரையறுக்கப்பட்டதன் காரணமாக சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை 50 நாட்களுக்கு மூட தீர்மானிக்கப்பட்டது. அதனால் தேசிய எரிபொருள் விநியோக கட்டமைப்புக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்பதை நாட்டு மக்களுக்கு தெளிவாக குறிப்பிட்டோம்.

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மூடப்பட்டமை தொடர்பில் பெற்றோலியக் கூட்டுத்தாபன தொழிற்சங்கங்களும் எதிர்த்தரப்பினரும் முன்வைத்த குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் தற்போது பொய்யாக்கப்பட்டுள்ளன. எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் என குறிப்பிட்டு மக்களை நெருக்கடிக்குள்ளாக்கியவர்கள் தொடர்பில் நாட்டு மக்கள் கவனம் செலுத்த வேண்டும்.

நாட்டில் எக்காரணிகளுக்காகவும் எரிபொருள் விநியோகத்தில் பாதிப்பு ஏற்படாது. நாடு சவால்களை எதிர்கொண்டுள்ள வேளையில் உள்ளக மட்டத்திலான தீர்மானங்கள் ஊடாக சவால்களுக்கு தீர்வு காண்பது சிறந்த முகாமைத்துவமாகும். தேசிய வளங்களை பிற நாட்டவர்களுக்கு தாரைவார்க்கும் கொள்கை அரசாங்கத்துக்கு கிடையாது.

## பங்காளி...

(தொடர்ச்சி)

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று முன்தினம் அலரிமாளிகையில் ஆளும் கட்சி குழுக் கூட்டம் இடம்பெற்றது. அரசியல் மற்றும் பொருளாதார பிரச்சினைகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

பிரதமர் தலைமையில் இடம்பெற்ற ஆளும் கட்சி குழுக் கூட்டத்தின் போது பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயப்பட்டன. கூட்டணின் பங்காளிக் கட்சிகளுக்கிடையில் தோற்றம் பெற்றுள்ள முரண்பாடுகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

கூட்டணியில் பங்காளிக் கட்சிகளுக்கிடையில் தோற்றம் பெற்றுள்ள முரண்பாடுகளுக்கு தீர்வு காண்பது அவசியமாகும். கூட்டணியின் அனைத்துத் தரப்பினரையும் அரசியல் ரீதியில் ஒன்றிணைத்து செயற்படுவது அவசியமாகும். அரசாங்கத்தையும் கூட்டணியையும் பலவீனப்படுத்தும் வகையில் ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் கருத்துரைப்பதை தவிர்த்துக்கொள்ள வேண்டும் என பிரதமர் மஹிந்த ராஜபக் ஷ ஆளும் கட்சி உறுப்பினர்களிடம் வலியுறுத்தினார்.நாட்டு மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் குறித்து அரசியல்வாதிகள் அதிகம் கவனம் செலுத்த வேண்டும்.ஆட்சிக்கு வந்ததன் பின்னர் மக்களிடமிருந்து விலகியுள்ளதை பல விடயங்கள் தற்போது உணர்த்தியுள்ளது. மக்களுடன் ஒன்றிணைந்து செயற்படுவது மிகவும் கட்டாயமானதாகும் என பிரதமர் ஆலோசனை வழங்கினார்.பொருளாதார நிலைமைகள் குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டது.தேசிய உற்பத்திகளை வலுப்படுத்துவதற்காக பல்வேறு திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. திட்டங்களை முழுமையாக செயற்படுத்தும் பொறுப்பு அரச அதிகாரிகளுக்கு மாத்திரமல்ல அரசியல்வாதிகளுக்கும் உண்டு.மக்களுக்கான திட்டங்கள் சிறந்த முறையில் செயற்படுத்தப்படுகின்றதா என்பது குறித்து அரசியல்வாதிகள் ஆராய வேண்டும் எனவும் பிரதமர் ஆலோசனை வழங்கினார் என இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த டி. சில்வா தெரிவித்தார்.

## பாக்...

(தொடர்ச்சி)

இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்ர சில்வா தெரிவித்தார்.

எனவே பாகிஸ்தானில் வசிக்கும் ஏனைய இலங்கையர்களோ அல்லது வெளிநாட்டில் வசிக்கும் இலங்கையர்களோ வீணாக, அச்சம்பவத்தை மையப்படுத்தி அச்சம் கொள்ளத் தேவை இல்லை என அவர் குறிப்பிட்டார்.

இந்த சம்பவம் தொடர்பில் சட்டத்தை கடுமையாக அமுல் செய்வதாக பாகிஸ்தான் பிரதமர் அறிவித்துள்ள நிலையில், இலங்கையர்களாகிய நாம் அறிவுபூர்வமாக நடந்துகொள்ளும் தேசத்தவர்கள் என்பதை உலகுக்கு உணர்த்த இதனை சந்தர்ப்பமாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்ர சில்வா நேற்று தலதா மாளிகையில் வழிபாடுகளில் கலந்துகொண்ட பின்னர் மேற்படி விடயத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

இந்த சம்பவம் மிகக் கொடூரமானது. மிலேச்சத்தனமானது. இது தொடர்பில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானும் கலந்துரையாடியுள்ளனர்.

அத்துடன் பாகிஸ்தானின் முப்படைத் தளபதி தொலைபேசியில் என்னுடன் கலந்துரையாடினார். இந்த சம்பவம் தொடர்பில் தற்போதும் 200 இற்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் இந்த சம்பவத்துடன் தொடர்புடையோருக்கு உச்ச பட்ச தண்டனையை வழங்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் அந்நாடு இருப்பதாகவும் அவர் என்னிடம் தெரிவித்தார் என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்ர சில்வா கூறினார்.

எவ்வாறாயினும் தற்போது பாகிஸ்தானில் வசிக்கும் இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு பாகிஸ்தான் அரசாங்கத்துக்கு அறிவித்துள்ளதாக பாகிஸ்தானுக்கான உயர் ஸ்தானிகர் ஓய்வுபெற்ற ரியர் அட்மிரல் மொஹான் விஜேவிக்கிரம தெரிவித்தார்.

தற்போது பாகிஸ்தானில் 400 இற்கும் அதிகமான இலங்கையர்கள் வசித்து வருவதாகவும் அவர் கூறினார்.

## புத்தாண்டின்...

(தொடர்ச்சி)

உள்நாட்டு அரிசியின் விலை 250 ரூபா வரை அதிகரிப்பதை யாராலும் தடுக்க முடியாது.

நாட்டில் காணப்படுகின்ற டொலர் நெருக்கடிக்கு சர்வதேச நாணய நிதியத்தை அன்றி சீனாவை நாடுவதால் தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியாது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் பி.ஹரிசன் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் ,நாட்டு மக்கள் தற்போது அரசாங்கத்திடம் அபிவிருத்தியைக் கோரவில்லை. 3 வேளை உணவு உண்ணக் கூடிய சூழலை உருவாக்கித் தருமாறு மாத்திரமே கோருகின்றனர்.

லிட்ரோ, அரச நிறுவனமாக இருக்கின்ற போதிலும் கூட, அந்நிறுவனத்தின் ஊடாக பாதுகாப்பான சமையல் எரிவாயு சிலிண்டர்களை விநியோகிக்க முடியாமை வெட்கப்பட வேண்டிய விடயமாகும்.இது தொடர்பில் மாவட்ட நீதிமன்றங்களுக்கு சென்று வழக்குத் தொடர்ந்து தீர்வைப் பெற்றுக்கொள்ளுமாறு அரசாங்கம் கூறுகிறது.

அவ்வாறு நீதிமன்றத்தின் ஊடாக தீர்வைப் பெற்றுக்கொள்ள நாம் தயாராக இல்லை. எனவே சமையல் எரிவாயு சிலிண்டரை அண்மித்த வெடிப்பு சம்பவங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கம் நஷ்டஈடு வழங்க வேண்டும்.இரசாயன உரத்தை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் தனியார் துறையினருக்கு அனுமதி வழங்கியுள்ளது. எனினும் அவை நாட்டுக்கு கொண்டு வரப்படுவதற்கு ஓரிரு மாதங்கள் செல்லும்.

அது வரையில் விவசாயமும் விளைச்சலும் இன்றி இருப்பதா? தற்போது அரிசி வகைகளின் விலைகளும் பாரியளவில் உயர்வடைந்துள்ளன. நாட்டரிசியின் விலை கூட 150 ரூபா வரை உயர்வடைந்துள்ளது. உரத்தட்டுப்பாட்டினால் மரக்கறி விலைகளும் உயர்வடைந்துள்ளன. அரசாங்கத்தின் முட்டாள்த்தனமான தீர்மானங்களே இதற்கான காரணமாகும். மியன்மாரிலிருந்து மாத்திரமல்ல எங்கிருந்து அரிசி இறக்குமதி செய்யப்பட்டாலும் சித்திரைப் புத்தாண்டு காலத்தில் உள்நாட்டு அரிசியின் விலை 250 ரூபா வரை அதிகரிப்பதை யாராலும் தடுக்க முடியாது. ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சியில் மாத்திரமே மக்களுக்கு 3 வேளையும் உண்ணக் கூடிய சூழல் உருவாகும். வேறு எந்வொரு ஆட்சியிலும் அதற்கான வாய்ப்பு கிடைக்காது. அத்தோடு நாட்டில் தற்போது காணப்படுகின்ற டொலர் நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கு சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதையன்றி சீனா உள்ளிட்ட எந்த நாட்டை நாடினாலும் நிரந்தர தீர்வைப் பெற்றுக் கொள்ள முடியாது என்றார்.

## இனவாத...

(தொடர்ச்சி)

எவ்வாறிருப்பினும் இதனைப் பயன்படுத்தி நாட்டு மக்கள் மத்தியில் குரோத உணர்வுகளை தீவிரப்படுத்த முயலும் இனவாத அரசியல் சக்திகள் தொடர்பில் அவதானமாக இருக்குமாறு ஒட்டு மொத்த இலங்கை மக்களையும் ஐக்கிய மக்கள் சக்தி கேட்டுக் கொவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பாகிஸ்தானின் சியல்கொட் நகரில் பிரியந்த குமார என்ற இலங்கையர் கொடூரமாக படுகொலை செய்யப்பட்ட சம்பவம் ஐக்கிய மக்கள் சக்தியை அதிர்ச்சியடையச் செய்துள்ளது. பிரியந்த குமாரவின் துயர மரணத்தால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம். பிரியந்த குமார சியல்கொட்டில் தொழிற்சாலை முகாமையாளராக சுமார் ஒரு தசாப்தம் பணிபுரிந்தார் என்றும் அறியப்படுகிறது.

செய்தி அறிக்கைகளின் படி, தனது மதத்தை அவமதித்த குற்றச்சாட்டின் பேரில் அவர் வன்முறைக் கும்பல் ஒன்றால் கொடூரமாக தாக்கப்பட்டு கொல்லப்பட்டுள்ளார். இந்த குற்றத்தை நாங்கள் வன்மையாகவும் வெளிப்படையாகவும் கண்டிப்பதோடு இந்த சம்பவம் குறித்து முழுமையான விசாரணை நடத்தி குற்றவாளிகளுக்கு தண்டனையைப் பெற்றுக் கொடுப்பதை விரைவுபடுத்துமாறு பாகிஸ்தான் அதிகாரிகளை கேட்டுக் கொள்கின்றோம்.

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் உள்ளிட்ட பாகிஸ்தான் தலைமை, தாக்குதலைக் கண்டித்துள்ளதுடன் இந்த படுகொலைக்கு நீதி வழங்குவதாகவும் தாக்குதலின் பின்னணி குறித்து விசாரணை நடத்த உறுதியளித்துள்ளதையும் கவனத்தில் கொள்கிறோம். இத்தகைய கொடூரமான தாக்குதல்கள் மற்றும் அவற்றின் அடிப்படையிலான கொடூரமான தீவிரவாத சித்தாந்தங்கள் ஒருபோதும் அனுமதிக்கப்படக்கூடாது.

இந்த விடயத்தில் இலங்கை முழுவதும் அனுதாபமும் கோபமும் வெளிப்படுவதை ஐக்கிய மக்கள் சக்தி நன்கு அறியும். இந்த சம்பவத்துக்கு பதிலளிப்பதில் நிதானத்தை கடைப்பிடிக்குமாறும் நாட்டு மக்கள் மத்தியில் குரோத உணர்வுகளை தீவிரப்படுத்த முயலும் இனவாத அரசியல் சக்திகள் தொடர்பில் அவதானமாக இருக்குமாறும் ஒட்டு மொத்த இலங்கை மக்களையும் ஐக்கிய மக்கள் சக்தி கேட்டுக் கொள்கிறது.

இந்தச் சக்திகள் தற்போது இலங்கையில் அனுபவித்து வரும் தற்போதைய சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் சுற்றுச் சூழல் நெருக்கடிகளில் இருந்து பொது மக்களின் கவனத்தை திசை திருப்ப இந்த நிகழ்வை பயன்படுத்தலாம். ஆத்திரமூட்டலுக்கான சாத்தியக்கூறுகள் குறித்து மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டும் எனவும் இதற்கு பதிலளிக்கும் வகையில் சாத்தியமான தாக்குதல்களில் இருந்து மக்களை பாதுகாத்துக்கொள்ள இலங்கையில் உள்ள சட்டத்தை அமுலாக்கும் அதிகாரிகள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இந்தநிலைமையை உன்னிப்பாகக் கண்காணிக்கவும் சம்பவம் குறித்து விரைவான விசாரணை நடத்தவும் ஐக்கிய மக்கள் சக்தி பாகிஸ்தானுக்கான இராஜதந்திர தகவல் தொடர்புகளை தொடர்ந்து வழங்கும். மேலும் இந்த நெருக்கடியான தருணத்தில் இலங்கையில் ஐக்கியத்தையும் ஒற்றுமையையும் கட்டியெழுப்புவதற்கு பாராளுமன்றத்தில் பிரதான எதிர்க்கட்சி என்ற வகையில் கட்சி தொடர்ந்தும் பணியாற்றும் .

## கடன்மன்னிப்பு...

(தொடர்ச்சி)

பிராந்தியத்திலுள்ள நாடுகளுக்கு தற்போது பாரிய அச்சுறுத்தலாக மாறியுள்ள மத அடிப்படைவாதம் மற்றும் பயங்கரவாதச் செயற்பாடுகளை முறியடிப்பதற்கு புலனாய்வுப் பிரிவுகள், கரையோரப் பாதுகாப்புப் பிரிவுகள் மற்றும் பிராந்திய நாடுகளின் கடற்படையினர் இடையேயான ஒருங்கிணைந்த செயற்பாடுகள் அவசியமாகும் என்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக் ஷ வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய அரபு இராச்சியத்தின் அபுதாபியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை ஆரம்பிக்கப்பட்ட இந்து சமுத்திர மாநாட்டின் ஆரம்ப உரையை நிகழ்த்தும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதி ,

கொவிட் தொற்றுப் பரவலுக்குப் பின்னர் பொருளாதாரத்தை மீட்டெடுக்க, பிராந்தியத்திலுள்ள அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். அதிகப்படியான உயிர்களைக் காப்பாற்றுவது என்பதை விலை மதிக்க முடியாவிட்டாலும் தொற்று நோயை எதிர்த்துப் போராடுவதற்கு உலகம் முழுவதும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்காக அதிக செலவை ஏற்கவேண்டி ஏற்பட்டுள்ளது.

பொருளாதார செயற்பாடுகளின் மந்தகதியால், உலகளாவிய நாடுகள் சுற்றுலா, வர்த்தகம் மற்றும் பொருளாதார வளர்ச்சி போன்ற கடுமையான சவால்களை எதிர்கொண்டுள்ளன.அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கு வல்லரசு நாடுகளால் வழங்கப்படும் ஒத்துழைப்புகளால் மாத்திரமே, அவ்வாறான சவால்களை எதிர்கொள்ள முடியும். அனைத்துப் பிரஜைகளுக்கும் தடுப்பூசி ஏற்றப்படும் வரையில் கொவிட் 19 தொற்றுப் பரவல் இல்லாமல் போகப்போவதில்லை. அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் தடுப்பூசி ஏற்றல் வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு வல்லரசு நாடுகள் உதவி புரிய வேண்டும்.

உலகளாவிய தொற்றுப் பரவலைத் தடுக்கும் வேலைத்திட்டத்துக்கு உலக சுகாதார ஸ்தாபனம் தலைமைத்துவம் வழங்கி வருகின்ற போதிலும் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள நாடுகளின் பொருளாதார மீட்சிக்கு எந்தவோர் உலக அமைப்பும் உதவ முன்வரவில்லை. தொற்றுப் பரவலென்பது வறிய மற்றும் வல்லரசு நாடுகளை ஒரே விதத்தில் பாதிப்படையச் செய்திருப்பினும் விகிதாசாரப் பாதிப்பின் சுமைகளை வறிய நாடுகளே தாங்கிக்கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளது.

வெளிநாட்டுக் கடனால் ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ள பொருளாதாரங்களுக்கு இது மிகவும் கடினமான சந்தர்ப்பமாகும். தொற்று நோயால் மேலும் பாதிக்கப்பட்டுள்ள வறிய நாடுகளுக்கு கடன் மன்னிப்பு வழங்கல், மறுசீரமைப்பை மேற்கொள்ளல் அல்லது கடன் நிவாரணக் காலங்களை வழங்க வல்லரசு நாடுகளும் பலதரப்பு நிறுவனங்களும் நடவடிக்கை எடுத்தால் அது மிகவும் வரவேற்கத்தக்கது.

தொற்றுநோய் அனுபவத்தின்படி, ஒரு நாட்டில் உள்ள பாதகமான நிலைமைகள், விரைவாக பிராந்தியத்துக்கும் இறுதியில் உலகம் முழுவதும் பரவக்கூடும். அதனால்தான், தொற்றுநோய்கள், பொருளாதாரம் அல்லது சூழலியல் விடயங்களில் நாடுகளைப் பாதிக்கும் பிரச்சினைகளைத் தீர்க்க பிராந்தியத்தில் உள்ள நாடுகள் மற்றும் ஒட்டுமொத்தமாக உலகம் முழுவதும் இணைந்து செயற்பட வேண்டியுள்ளது.

தொற்றுநோய்கள், பொருளாதாரம் அல்லது சூழலியல் தொடர்பாக நாடுகளைப் பாதிக்கும் பிரச்சினைகளைத் தீர்க்க பிராந்தியத்தில் உள்ள நாடுகள் மற்றும் ஒட்டுமொத்தமாக உலகம் முழுவதும் இணைந்து செயற்பட வேண்டும். மனிதகுலம் எதிர்கொள்ளும் மிகவும் கடினமான சவால்களில் ஒன்றாக தற்போதைய காலநிலை நெருக்கடி காணப்படுகிறது.

எக்ஸ்பிரஸ் பேர்ள் பேரழிவு என்பது, ஒரு தனிப்பட்ட சம்பவம் அல்ல. நியு டயமன்ட் கப்பலில் ஏற்பட்ட தீப்பரவல் கூட்டு முயற்சியால் வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தப்பட்டது. இவ்விரு சம்பவங்களையும் சுட்டிக்காட்டக் காரணம், அபாயகரமான மற்றும் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் பொருட்களை கடற்பரப்புக்குள் கொண்டு செல்வதில் கடுமையான கட்டுப்பாடுகளின் அவசரத் தேவை காணப்படுவதாலாகும்.

நவீன உபகரணங்களுடன் கூடிய இழுவைப் படகுகள் மூலம் கடல்கடந்த கடற்பகுதியில் மீன்பிடிப்பது குறிப்பிடத்தக்க பிரச்சினையாக உள்ளது. இதனால், தேசிய அளவில் மீன்பிடித் தொழிலை மேற்கொண்டிருக்கும் வறிய மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு வருகின்றது. எதிர்காலத்தில், இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் ஒட்டுமொத்த சூழலையும் உள்ளூர் பொருளாதாரங்களின் நம்பகத்தன்மையையும் பராமரித்தல் போன்ற பிரச்சினைகளைக் குறைத்துக்கொள்வதற்கான ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை முன்னெடுப்பது முக்கியமாகிறது.

நிலைத்தன்மை தொடர்பான பிரச்சினைகள் தொடர்பில் ஒன்றிணைந்துகலந்துரையாடுவதற்கான பிராந்திய பொறிமுறையை நிறுவ வேண்டும். இந்து சமுத்திரப் பிராந்தியமானது, மனிதக் கடத்தல்கள், போதைப்பொருள் கடத்தல் உள்ளிட்ட குற்றச்செயல்களின் நிலையமாகக் காணப்படுவதை ஏற்றுக்கொண்டாக வேண்டும். போதைப்பொருள் வியாபாரமானது, பிராந்திய நாடுகளுக்குப் பிரச்சினையாக மாறியுள்ளது. புலனாய்வுப் பிரிவுகள், கரையோரப் பாதுகாப்புப் பிரிவுகள் மற்றும் பிராந்திய நாடுகளின் கடற்படையினர் இடையேயான ஒருங்கிணைந்த செயற்பாடுகள் மூலமாகவே இதனை வெற்றிகரமாக முறியடிக்க முடியும்.

மனிதக் கடத்தல்களைக் கட்டுப்படுத்தவும் இவ்வாறானதொரு நடவடிக்கையும் ஒருங்கிணைவும் ஒத்துழைப்புமே அவசியமாகவுள்ளது. பிராந்தியத்திலுள்ள நாடுகளுக்கு தற்போது பாரிய அச்சுறுத்தலாக மாறியுள்ள மத அடிப்படைவாதம் மற்றும் பயங்கரவாதச் செயற்பாடுகளை முறியடிப்பதற்கும் இவ்வாறான ஒருங்கிணைப்பே தேவைப்படுகின்றது. இது தொடர்பில் மிகக் கவனமாகக் கண்காணித்து இல்லாதொழிக்கவில்லையாயின், அடிப்படைவாதம் மற்றும் பயங்கரவாதம் போன்றன சுலபமாக இன்னுமோர் இனத்தை நோக்கிச் செல்ல வாய்ப்புள்ளது என்றார்.

## இன்று....

(தொடர்ச்சி)

உள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயம் ஊடாக போதுமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் சடலத்தை நாட்டிற்கு கொண்டுவருவது உள்ளிட்ட அடுத்தகட்ட நடவடிக்கைகளுக்கான செலவை ஏற்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக பாகிஸ்தானுக்கான இலங்கையின் உயர்ஸ்தானிகர் ஓய்வுபெற்ற ரியர் அட்மிரல் மொஹான் விஜேவிக்ரம தெரிவித்தார்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில், பாகிஸ்தான் அரசாங்கத்தினால் முழுமையான விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார். உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு நஷ்டஈடு வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். நட்ட ஈடு தொடர்பிலான பேச்சுக்கள், பிரியந்த குமாரவின் தொழில் வழங்குநர் மற்றும் பாகிஸ்தான் அரசின் தலையீட்டுடன் இடம்பெற்று வருவதாக அறிய முடிகிறது.

**விசாரணை நிலைமை:**

இந்நிலையில் சம்பவம் தொடர்பில் பஞ்சாப் பொலிஸார் விஷேட விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். பஞ்சாப் மாகாண பொலிஸ் மா அதிபர் சர்தார் அலி கானின் நேரடி கட்டுப்பாட்டில் இந்த விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

அந்த விசாரணைகளில் நேற்று (5) மாலை வரை சுமார் 235 பேர் வரை கைது செய்யப்பட்டிருந்தனர். இவர்களில் இந்த கொடூர கொலையுடன் தொடர்புடைய, ' ராஜ் கோ இன்டஸ்ட்ரீஸ் ' எனும் ஆடை தொழிற்சாலையின் மேற்பார்வையாளர் ஒருவர் உட்பட 13 முக்கிய சந்தேக நபர்களும் அடங்குவதாக பாகிஸ்தான் பொலிஸ் தகவல்கள் தெரிவித்தன.

கொல்லப்பட்ட பிரியந்த குமார தியவதன பணியாற்றிய இந்த ஆடை தொழிற்சாலையிலுள்ள, 160 சி.சி.ரி.வி. கமராக்களின் 24 மணி நேர பதிவு விசாரணையாளர்களால் பெறப்பட்டு, அதனை அடிப்படையாகக் கொண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் பலர் தலைமறைவாகியுள்ளதாகவும், அவர்களை கைது செய்ய 10 சிறப்பு பொலிஸ் குழுக்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும், தொலைபேசி கோபுர தகவல்கள் மற்றும் அறிவியல் தடயங்களை வைத்து அவர்களை தேடி வருவதாகவும் சியால்கோட், மாவட்ட பொலிஸ் அத்தியட்சர் (டி.பி.ஓ) உமர் சஹீட் மலிக் கூறினார்.

எவ்வாறாயினும் இதுவரை 900 பேருக்கு எதிராக இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸ் தரப்பால் நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த கொடூர கொலை பதிவான தொழிற்சாலை மற்றும் வரிசாபாத் வீதிப் பகுதி அமைந்துள்ள, அகோகி பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி ( எச்.எச்.ஓ.) அர்மான் மக்த் இந்த முதற் தகவல் அறிக்கையை நீதிமன்றில் தாக்கல் செய்துள்ளார்.

பாகிஸ்தான் தண்டனை சட்டக் கோவையின் 302,397,120,427, 431,157,149 ஆம் அத்தியாயங்களின் கீழும், பாகிஸ்தானின் பயங்கரவாத தடைச் சட்டத்தின் 7 மற்றும் 11 ஆவது அத்தியாயங்களின் கீழும் தண்டனைக்குரிய குற்றங்களை சந்தேக நபர்கள் புரிந்துள்ளதாக கூறியே, இந்த முதல் தகவல் அறிக்கை இவ்வாறு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட பிரதான சந்தேக நபர்கள் 13 பேரும் குற்றவியல் நீதிமன்றம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு, 24 மணி நேர பொலிஸ் காவலில் வைத்து விசாரிக்க அனுமதி பெறப்பட்டுள்ளது. பர்ஹான் இத்ரீஸ், சபூர் பட், தல்ஹா, அப்துர் ரஹ்மான், இம்ரான், தைமுர், சுஹைப், ரஹீல், உஸ்மான், சஹ்சைப், நாசிர், இஹ்திசாம் மற்றும் ஜுனைட் ஆகிய பிரதான சந்தேக நபர்களே இவ்வாறு பொலிஸ் காவலில் எடுக்கப்பட்டுள்ளனர். அவர்களை அவ்வாறு பொலிஸ் காவலில் வைத்து விசாரிக்க குற்றவியல் நீதிமன்றின் நீதிவான் சரீப் அஹமட் அனுமதியளித்துள்ளார். அவர்கள் இன்று ( 6) குஜ்ரன்வாலா பயங்கரவாத தடுப்பு நீதிமன்றில் ஆஜர் செய்யப்படுவர் என பஞ்சாப் பொலிஸார் தெரிவித்தனர்.

**சம்பவமும் பின்னணியும்**

பேராதனை பல்கலைக்கழகத்தில் உற்பத்தி பொறியியலாளராக பொறியியல் துறையில் பட்டம் பெற்ற பிரியந்த குமார தியவதன, முதலில் இலங்கையில் பிரண்டிக்ஸ் ஆடை உற்பத்தி நிலையத்தில் சேவையாற்றியதுடன் அதன் பின்னர் 11 வருடங்களுக்கு முன்னர் பாகிஸ்தானுக்கு சென்றிருந்தார். 48 வயதான அவர் கனேமுல்ல கெந்தலியத்தபாலுவ பிரதேசத்தை சேர்ந்தவர்.

இரு பிள்ளைகளின் தந்தையான அவர், சியால்கோட் நகரிலுள்ள ராஜ்கோ இன்ட்ரஸ்ட்ரீஸ் தனியார் ஏற்றுமதி தொழிற்சாலையொன்றில் முகாமையாளராக கடமையாற்றியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவர் இஸ்லாத்துக்கு எதிராக மத நிந்தனையில் ஈடுபட்டதாக வெள்ளிக்கிழமை (3) காலை தகவல் பரவியுள்ளது. "தொழிற்சாலையில் இந்தத் தகவல் பரவியதும் ஏராளமான ஊழியர்கள் தொழிற்சாலை முன்பு, திரண்டு போராட்டம் நடத்தினர். பின்னர் பிரியந்த குமார தியவதனவை உடல் ரீதியான துன்புறுதலுக்குள்ளாக்கி எரித்துக் கொன்றனர்," என்று சம்பவத்தை நேரில் பார்த்த முகமது பஷீர் என்பவர் பி.பி.சி.யிடம் கூறியுள்ளார். நூற்றுக்கணக்கானோர் ஒன்று திரண்டிருந்தநேரத்தில், இந்த அசம்பாவிதம் நேர்ந்துள்ளது.

வெள்ளிக்கிழமை மு.ப. 11.35 மணியளவில் மீட்புதவி துறையினருக்கு இந்த நிகழ்வு தொடர்பாக தொலைபேசி அழைப்பு ஒன்று வந்துள்ளது. அவர்கள் அங்கு செல்லும் முன்னரே பிரியந்த குமார தியவதன எரித்துக் கொல்லப்பட்டுள்ளார் என பஞ்சாப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இலங்கையை சேர்ந்த முகாமையாளருக்கு எதிராக வெள்ளிக்கிழமை காலை முதலே செய்திகள் பகிரப்பட்டு வந்தாலும், முன்கூட்டியே பாதுகாப்பு நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை என்று சியால்கோட்டில் உள்ள உள்ளூர் ஊடகவியலாளர் யாசிர் ராசா பிபிசி உருது மொழி சேவையிடம் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், பஞ்சாப் பொலிஸாரின் விசாரணைகளுக்கு அமைய, பிரியந்த குமார முகாமையாளராக கடமையாற்றிய தொழிற்சாலையில், புதிதாக வெள்ளையடிக்கப்பட்டு வருவதாகவும், அதனை மையப்படுத்தி ஒட்டப்பட்டிருந்த சில அறிவித்தல்களை அகற்ற அவர் ஆலோசனை வழங்கியிருந்ததாகவும் அறிய முடிகிறது.

இதனை, தொழிற்சாலைக்குள், முகாமையாளருக்கு எதிராக மத நிந்தனையாக சிலர் பரப்பியதால் நிலைமை மோசமடைந்துள்ளதாக தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், சி.சி.ரி.வி. காணொளிகளை மையப்படுத்தி அது குறித்த மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸ் தகவல்கள் தெரிவித்தன.

வன்முறையாளர்கள் பிரியந்த குமாரவை தாக்கும் போது, அவரை காப்பாற்ற தொழிற்சாலையில் சிலர் முயன்றுள்ளதாக சி.சி.ரி.வி. காணொளி ஊடாக தெரியவந்துள்ளது. அவர்கள் வன்முறையாளர்களிடமிருந்து பிரியந்த குமாரவை காப்பாற்ற போராடுவதும், ஒரு கட்டத்தில் அவரை மேல் மாடிக்கு அனுப்பி வைப்பதும் அதில் பதிவாகியுள்ளது.

மேல் மாடி நோக்கி செல்லும் பிரியந்த குமாரவை வன்முறையாளர்கள் துரத்தியுள்ள நிலையில், அவர் சூரிய மின் சக்தி தொடர்பிலான அறையில் ஒளிந்துகொண்டுள்ளார். பின்னர் அங்கு செல்லும் வன்முறையாளர்கள், அங்கு வைத்து அவரை மிக மோசமாக தாக்கியுள்ளனர். கைது செய்யப்பட்டுள்ள பிரதான சந்தேக நபர்களில் சிலர் அதில் உள்ளடங்குகின்றனர்.

அந்த தாக்குதலிலிருந்து பிரியந்தவை மீட்க, தொழிற்சாலையின் உற்பத்தி முகாமையாளர் முயன்றுள்ள போதும், அது சாத்தியப்படாத நிலையில், பிரியந்த குமாரவை மாடியிலிருந்து தூக்கி வரிசாபாத் வீதிக்கு வீசியுள்ளனர். அதன் பின்னரேயே வீதியில் அவரை எரித்துள்ளனர்.

பிரேத பரிசோதனை அறிக்கை பிரகாரம், பிரியந்த குமாரவின் உடலில் 99 வீதமான பாகங்கள் எரிந்துள்ளன. அத்துடன் அனைத்து டிசுக்களும் சேதமடைந்துள்ளதுடன் எலும்புகள் அனைத்தும் நொருங்கியுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

**பிரியந்தவின் மனைவி நிரோஷி தசநாயக்கவின் கோரிக்கை :**

''எனது கணவர் ஓர் அப்பாவி. வெளிநாட்டில் சேவை செய்த போது, மிலேச்சத்தனமாக கொலை செய்யப்பட்டதை நான் செய்திகளிலேயே பார்த்தேன். அதன்பின்னர் இணையத்தளத்திலும் அதனை பார்த்தேன். மிகவும் கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டுள்ளார். இந்த சம்பவம் தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணைகளை நடத்தி, கணவருக்கும், இரண்டு பிள்ளைகளுக்கும் நியாயத்தை பெற்றுத்தருமாறு இலங்கை ஜனாதிபதி, பாகிஸ்தான் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரிடம் மிகத் தாழ்மையாக கேட்டுக்கொள்கின்றேன்," என அவரது மனைவி நிரோஷி தசநாயக்க கோரியுள்ளார்.

இதேவேளை, கொலை செய்யப்பட்ட பிரியந்த குமாரவின் சகோதரனான கமலசிறி சாந்த குமாரவும் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டுள்ளார். இனவாத குழுவொன்று தொழிற்சாலைக்குள் போராட்டங்களை நடத்திய சந்தர்ப்பத்திலேயே இந்த கொலை இடம்பெற்றுள்ளதாகவே அறிய முடிகின்றது என அவரது சகோதரன் தெரிவிக்கின்றார்.

''சியல்கொட் தொழிற்சாலைக்கு 2012ஆம் ஆண்டே அவர் சென்றார். அன்று முதல் இறுதி வரை அதே தொழிற்சாலையில் தான் கடமையாற்றினார். அந்த தொழிற்சாலைக்கு முழுமையாக அவரே பொறுப்பாக இருந்தார். உரிமையாளருக்கு அடுத்ததாக அவரே இருந்தார். இனவாத குழுவொன்று உள்ளே பதாகைகளை ஒட்டியுள்ளனர். பணிப் பகிஷ்கரிப்பு போராட்டத்தையும் நடத்தியுள்ளனர். அந்த சந்தர்ப்பத்திலேயே இந்த அசம்பாவிதம் இடம்பெற்றுள்ளதாக தற்போது அறியக் கிடைக்கின்றது," என கொலை செய்யப்பட்ட பிரியந்த குமார தியவதனவின் சகோதரன் கமலசிறி சாந்த குமார தெரித்தார்.

**முதலமைச்சர் கூறுவதென்ன?**

இதுவொரு கொடூரமான சம்பவம் என பஞ்சாப் மாகாண முதலமைச்சர் உஸ்மான் பஸ்தார் தெரிவித்துள்ளார். இந்த சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளேன். சட்டத்தை கையில் எடுக்க எவருக்கும் அனுமதி இல்லை. மனிதாபிமானமற்ற செயற்பாடுகளில் ஈடுபட்டவர்கள் தப்பிக்கமாட்டார்கள் என்பது உறுதி," என அவர் கூறியுள்ளார்.

## சிறந்த செய்தி வாசிப்பாளருக்கான அரச விருது



சிறந்த செய்தி வாசிப்பாளருக்கான அரச விருதை நேத்ரா தொலைக்காட்சியின் பகுதிநேர செய்தி வாசிப்பாளர் இர்ஷாத் ஏ.காதர் பெற்றுக்கொண்டார்.

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அரச தொலைக்காட்சி ஆலோசனைக்குழுவின் ஏற்பாட்டில் 15ஆவது வருடமாக இடம் பெற்ற 2020ஆம் ஆண்டுக்கான தொலைக்காட்சி அரச விருது வழங்கும் விழா பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இதன்போது சிறந்த செய்தி வாசிப்பாளருக்கான அரச விருதை நேத்ரா தொலைக்காட்சியின் பகுதிநேர செய்தி வாசிப்பாளர் இர்ஷாத் ஏ.காதர் பெற்றுக்கொண்டார்.

## பொதுமக்களுக்கான அறிவித்தல்

